பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 23 செவ்வாய்க்கிழமை 08.12.2020 கதிர் 33

இனி இது ரகசியம் அல்ல!

நாட்டில் பரபரப்பாகப் பேசப்படும் முக்கிய விடயம் ஒன்றில் இருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்ப வேண்டும் என்றால் இன்னொரு விடயத்தில் பெரிய சர்ச்சையை உருவாக்க வேண்டும். ஒரு கோட்டை சிறிதாக்குவதானால் பக்கத்தில் ஒரு பக்கம் 02

## புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும்

### சுமந்திரன், கஜேந்திரகுமார், விக்கியிடம் மனோ தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான தடையை நீக்குமாறு கோரி இலங்கை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் சபையில் நேற்று தெரிவித்தார்.

அரசின் 2021ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரை யாற்றியபோது பக்கம் 02

மாவீரர் நாள் நினைவேந்தல் சர்ச்சை:

## நாடாளுமன்றில் பொன்சேகாவை வறுத்தெடுத்தார் மனோ கணேசன்



மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, நாடாளுமன்றில் அன்று தெரிவித்த கருத்துக்கு தமிழ் முற்போக்குக் பக்கம் 02

# அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக தீப்பந்தம் ஏந்தி மாபெரும் போராட்டம்!

## கோட்டாவின் செயலகத்துக்கு முன்னால் சஜித் அணி அதிரடி



கொழும்பு, டிசெம்பர் 08

'அடக்குமுறையை நிறுத்து' என்ற தொனியின் கீழ் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் செயலகத்துக்கு முன்னால் நேற்று மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்குக் கடும் எதிர்ப்பையும், கண்டனத்தையும் வெளியிடும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியினர் தீப்பந்தம் ஏந்தி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 02




சம்பந்தனோ, சுமந்திரனோ இனவாதம் பேசவில்லை

## தமிழ்க் கூட்டமைப்பைத் தடை செய்வதென்பது தமிழர்களின் உரிமையைப் பறிப்பதற்குச் சமம்

### சரத் வீரசேகர முட்டாளா என்று பொன்சேகா கேள்விக்கணை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்வதானது, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பதற்குச் சமமானதாகும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சம்பந்தனோ, சுமந்திரனோ இனவாதம் பேசவில்லை. அவர்கள் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்தே பேசி வருகின்றார்கள். அதனை சிங்கள தரப்புகள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் பக்கம் 02

## கொரோனா பலி 142 ஆக உயர்வு

### மேலும் இருவர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 142 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனாவின் மூன்றாவது அலையில் மட்டும் 129 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்றாவது அலை விசாரணைகளில் ஈடுபட்ட புலனாய்வு அதிகாரிகள் 90 பேருக்கு தொற்று

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தகவல்

இலங்கையில் கொரோனாவின் மூன்றாவது அலை குறித்து விசாரணைகளை முன்னெடுத்து வந்த 90 புலனாய்வு அதிகாரிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு பக்கம் 11

## 14 சடலங்களை ஏற்க உறவினர்கள் மறுப்பு

### நெருக்கடியில் சுகாதாரப் பிரிவு

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த 14 பேரின் சடலங்களைப் பொறுப்பேற்க அவர்களது உறவினர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனால் சுகாதாரப் பிரிவினர் பாரிய நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கியுள்ளனர் என அறியமுடிகின்றது.

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இந்தச் சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல நாட்களாக பக்கம் 02

## நேற்று மட்டும் 703 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதி

### 28 ஆயிரத்தைக் கடந்தது தொற்றாளர்களின் எண்ணிக்கை

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்று மாத்திரம் 703 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பேலியகொடை மற்றும் சிறைச்சாலை கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கே இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது. பக்கம் 02

## மஞ்சள் கடவையில் அரச பஸ் மோதி வயோதிபர் ஒருவர் பரிதாப மரணம்!

### பளை வைத்தியசாலையில் குழப்பம்

கிளிநொச்சி மாவட்டம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் வீதியில் மஞ்சள் கடவை ஊடாக சைக்கிளில் வீதியைக் கடந்த வயோதிபரை அரச பக்கம் 02







## இன்று தொடக்கம் பாடசாலைகள் யாழ்.,கிளிநொச்சியில் இயங்கும்!

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் இன்று முதல் இயங்கும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நவம்பர் 24ஆம் திகதி மூடப்பட்ட கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் இரண்டு வாரங்களின் பின்னர் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் பக்கம் 02

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பெரிய கோட்டைக் கீற வேண்டும் எனது சில தினங்களுக்கு முன்னர் இப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

மஹர சிறைச்சாலைக் கலவரக் கவனத்தைத் திசை திருப்புவதற்காகத் தமிழ் தம்பதியினரால் தெற்குக்குக் கிளைமோர் குண்டு எடுத்துவரப்பட்டதான செய்தி ஒன்று கசிய விடப்பட்டிருப்பதாக அப்போது குறிப்பிட்டிருந்தேன். என் பத்தியில் அப்படி செய்தி வெளியான அன்றுதான், கிளைமோர் பிடிபட்ட தகவலும் தென்னிலங்கையில் பிரபல்யப்படுத்தப்பட்டது.

உங்கள் ஊகம் சரி என்று சில வாசகர்கள் அன்று மாலையே எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்துக் குறிப்பிட்டு சிலாகிக்கவும் தவறவில்லை. அந்த ஊகத்தை வலுப்படுத்தும் மற்றொரு தகவலும் இப்போது அம்பலமாகியுள்ளது.

வழக்கமாக கிளைமோர் குண்டுகளில் அதனை இயக்குவது தொடர்பான சில வழிகாட்டல் குறியீடுகள் இருக்கும். கிளைமோரின் எந்தப் பக்கம் இலக்கு வைக்கப்படுவோரை நோக்கியதாக இருக்க வேண்டும் என்பது போன்ற குறிகாட்டிகள் இருக்கும். புலிகள் தயாரிக்கும் கிளைமோர்களில் அது சுத்தத் தமிழில் எழுதப்பட்டிருக்கும். ஆனால் மேற்படி தமிழ்த் தம்பதியினரிடம் இருந்து புலனாய்வாளர்கள் கைப்பற்றியதாகக் கூறப்படும் கிளைமோர்க் குண்டில் அது முழுச் சிங்களத்தில் மட்டும் இருக்கின்றதாம்.

இந்த விடயத்தில் *'எங்கப்பன் குதிருக்குள்ள இல்லை'*, என்ற மாதியான ஒரு செய்தியை இந்தச் சிங்களக் குறியீடுகள் தருகின்றன என எனக்குத் தோன்றுகின்றது.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

★ ★ ★

வரவு – செலவுத் திட்டத்தில் நாளை நிதியமைச்சின் மீதான விவாதம்.

ஏற்கனவே கஜேந்திரகுமாரும், சாணக்கியனும், சிறிதரனும் வரவு – செலவுத் திட்டத்தில் ஒரு பிடிபிடித்து விட்டனர்.

இப்போது Turn நீதியரசர் விக்னேஸ்வரன் மற்றும் சுமந்திரன் பக்கம்.

ஒரு முழக்கம் முழங்கி சர்ச்சை ஏற்படுத்த, எழுதித் தயாரித்த தமது உரையுடன் விக்னேஸ்வரன் தயார் என்று தெரிகின்றது. நாளை அவர் ஒரு பிடி பிடிப்பார், தமது Colours காட்டுவார் என்று எதிர்பார்க்கலாம்.

தன்பாட்டுக்கு ஒரு முழக்கம் முழங்குவதற்கு சுமந்திரனும் தயார். ஆனால் அவருக்கு ஒரு சிக்கல். தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் அரச சொத்துக்களைச் சேதமாக்கிய குற்றத்தின் பேரில் கைதாகும் ஆபத்தை எதிர் கொண்டிருக்கின்றார். அது வெளிப்படைக்குத்தான் அரச சொத்துக்களைச் சேதமாக்கிய விவகாரம். உண்மையில் அதிகாரப் பகிர்வு சர்ச்சையை அடிப்படையாகக் கொண்ட சிக்கல். பிரதேச சபையின் அதிகாரத்தை மத்திய அரசுப் பிரதிநிதிகள் பலவந்தமாகப் பிடுங்குவதற்கு எதிராகத் துணிச்சலுடன் செயற்பட்ட ஒரு தவிசாளர் சம்பந்தப்பட்ட விவகாரம். அந்தத் தவிசாளருக்காக வாதாடுவதற்கு நாளை மல்லாகம் நீதிமன்றில் சுமந்திரன் பிரசன்னமாவது அத்தியவசியமானது என்பது சட்டத்தரணிகள் தரப்புகளினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதனால் என்ன செய்வது என்ற தடுமாற்றத்தில் – இரட்டை மனதில் – சுமந்திரன் இருக்கின் றார் எனத் தெரிகின்றது.

நீதி அமைச்சு மீதான விவாதம் முக்கியமான விடயம். அதில் உரையாற்றி உண்மைகளை அம்பலப்படுத்துவதா? அல்லது வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரின் துணிச்சலான நடவடிக்கையை மெச்சும் விதத்தில் அவருக்காக மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலையாவதா?

சுமந்திரனின் தீர்மானத்தைப் பொறுத்தது அது.

★ ★ ★

தரப்புக்களை கையாள்வதற்கு பிரிட்டிஷார் ஒரு தந்திரத்தை நமக்கு அறிமுகப்படுத்திச் சென்றிருக்கின்றார்கள். அது, நாம் நெருங்கிப் பிரச்சினையை எதிர் கொள்ள வேண்டிய தரப்புகளை பிரித்துக் கையாள்வது. பிரித்து ஆளுவது – Divide and Rule – என்பார்கள்.

அந்தத் தந்திரத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இப்போது வசமாகக் கையாள்கின்றார்.

மொட்டுக் கட்சி எம்.பிக்களை ஒன்றாகச் சந்திக்காமல் – ஒன்றாக எதிர்கொள்ளாமல் – பிரித்துக் கையாள்வதுதான் அது.

ஒவ்வொரு வாரமும் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு தொகுதி எம்.பிக்களை இரவு விருந்துக்கு அழைத்துப் பேசி அரவணைக்கும் சமயோசிதத்தை சாமர்த்தியமாக அவர் முன்னெடுக்கின்றார்.

அந்த வகையில் கடந்த வாரம் மொட்டுக் கட்சியின் இளம் எம்.பிக்களான ஒரு குழுவினரை அழைத்துப் பேசி தாஜா பண்ணினார் அவர்.

அச்சமயம் இளம் எம்.பி.ஒருவர் ஜனாதிபதியிடம் ஒரு யோசனையை முன்வைத்தார் *"கொரோனாப் பிரச்சினை, மஹர சிறைக் கலவரம் போன்றவற்றினால் அரசின் செல்வாக்குச் சரிந்து விட்டது என்று சமூக ஊடகங்கள் வாயிலாக எதிர்க்கட்சியினர் ஒரு பொய்ப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்தி எங்கள் செல்வாக்கைக் காட்டுவோம், எதிரணிக்கு மீண்டும் ஒரு பாடம் கற்பிப்போம்"* – என்று ஆலோசனை கூறினார் அந்த இளம் எம்.பி.

ஆனால் அந்த யோசனை தொடர்பில் எந்தப் பதிலும் – குறிப்பும் – சொல்லாமல் விடயத்தை ஒதுக்கி விட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

ஜனாதிபதியின் பிரதிபலிப்பு மாகாண சபைத் தேர்தலை இப்போது – உடனடியாக – நடத்தும் எண்ணம் அவருக்கு கிடையாது என்பதையே காட்டுவதாக இரவு விருந்துக் கூட்டத்தில் பங்குபற்றிய ஒருவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் கோட்டைவிட்டதை மாகாணசபைத் தேர்தலில் பிடிப்போம் என்று நம் பக்கத்தில் காத்திருப்பவர்களை எல்லாம் சலிக்க வைக்கப் போகின்றது இத் தகவல். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? உள்ளதைச் சொல்லத்தானே வேண்டும்......?

– மின்னல் –

## அரசின் அடக்குமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

நாட்டில் அரச பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது எனவும், இதன் வெளிப்படாகவே சிறைக்கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் சஜித் பிரேமதாஸ கருத்து வெளியிட்டார்.

மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன எனவும், சிறைச்சாலை சம்பவத்துக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும் எனவும் இதன்போது அவர் கோரிக்கை விடுத்தார்.

அரசின் அடக்குமுறை செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

## தமிழ்க் கூட்டமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வலியுறுத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அண்மையில் வெளியிட்டிருந்த கருத்துக்குப் பதிலளிக்கும்போதே சரத் பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் எதிர்காலம் குறித்து பேசுபவர்கள் முதலில் ஒழுக்க நெறியைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். ஒழுக்கம் இல்லாதவர்கள் அதிகாரத்துக்கு வந்துள்ளதால், நாடும் ஒழுக்கமற்றதாக மாறக்கூடும்.

இராணுவம் பாரிய பின்னடைவைச் சந்தித்த 2009 ஜனவரி 31 மற்றும் பெப்ரவரி முதலாம் திகதிகளில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தத்தை அறிவித்தபோதும், நானே அதற்கு இணங்கவில்லை. சரத் வீரசேகர போன்றவர்கள் முதலில் வரலாறுகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

போர் வெற்றி இராணுவத்தை மாத்திரமே சாரும். அதில் அரசியல்வாதிகள் எவரும் உரிமை கொண்டாட முடியாது.

அமைச்சர் சரத் வீரசேகர, வெறுமனே தெற்கு சிங்கள மக்களுக்கான அமைச்சர் மாத்திரமல்ல, வடக்கு – கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களினதும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்பதை அவர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஓர் இனத்தின் உரிமைகள் சார்ந்து பேசுபவர்களை அரசியல் ரீதியில் தடை செய்ய வேண்டும் என்று கூறுமளவுக்கு சரத் வீரசேகர முட்டாளா? என்று கேள்வி எழுப்பினார்.

## புலிகள் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டுள்ள அமைப்பு என்பதால் அந்தத் தடையை நீக்குமாறு கோரி தமிழ் அரசியல்வாதிகள் நீதிமன்றம் சென்று வழக்குத் தாக்கல் செய்யலாம். அதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு.

இது தொடர்பில் சில நாள்களுக்கு முன்பு கஜேந்திரகுமார் எம்.பியிடம் சொன்னேன். அதேபோல் சுமந்திரன் எம்.பியிடமும் சொல்கின்றேன். விக்னேஸ்வரன் எம்.பியிடமும் சொல்கின்றேன். சட்டத்தரணிகளான அவர்கள் நான் கூறுவது போன்று செயற்படலாம் – என்றார்.

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் நேற்று தக்க பதிலடி கொடுத்தார்.

மனோ கணேசன் சபையில் நேற்று உரையாற்றும்போது அந்தப் பேச்சை சரத் பொன்சேகா உள்ளிட்ட எதிரணியினரும், ஆளுங்கட்சியினரும் கவனமாகச் செவிமடுத்துக் கொண்டிருந்தனர்.

அவரின் உரையின் ஒரு பகுதி வருமாறு:–

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா போட்டியிட்டபோது அவருக்கு ஆதரவாக வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குச் சென்று பரப்புரை முன்னெடுத்தவன் நான். ரணில் விக்கிரமசிங்க உட்பட பலர் சரத் பொன்சேகாவை கைவிட்டுச் செல்ல கடைசி வரை நான் அவருடன் இருந்தேன். இன்றும் சரத் பொன்சேகாவை மதிக்கின்றேன். ஆனால், அவர் நன்றி மறந்து உரையாற்றியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பாகும். எனவே, அவ்வமைப்பை இங்கு நினைவுகூர முடியாது. புலிக்கொடி மற்றும் புலிக் கொள்கைகளை முன்னிறுத்தி நிகழ்வுகளை நடத்தமுடியாது. ஆனால், உயிரிழந்தவர்களை நினைவுகூரும் உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது. அது போராளியாக இருந்தால்கூட நினைவுகூரலாம்.

நினைவேந்தல் குறித்து நான் வெளியிட்ட கருத்தையும், மாவீரர் நாள் நினைவேந்தலையும் தொடர்புபடுத்தி, மனோ கணேசனின் கருத்து எமது கட்சியின் கருத்து அல்ல எனவும் சரத் பொன்சேகா கூறியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியை நாம்தான் உருவாக்கினோம். சரத் பொன்சேகா நேற்று வந்தவர். அரசியலில் நான் சிறு பையன் கிடையாது. ஜே.வி.பிக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இருக்கும் வேறுபாடு குறித்து எமக்கு எவரும் பாடம் எடுக்கவேண்டியதில்லை.

அதேபோல புரெவி புயல் மாவீரர் நாளன்று வந்திருந்தால் மகிழ்ச்சி என்ற தொனியில் சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்தும் தவறானது. என்னை அமைச்சர் ஒருவர் முட்டாள் என விமர்சித்தார். நீங்களும் அந்த நிலைக்கு விழுந்து விடாதீர்கள்.

மாவீரர் நாள் நினைவேந்தலில்கூட தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து வாழ்வதற்கு இன்னமும் வாய்ப்பு உள்ளது என்ற விடயத்தையே நான் வலியுறுத்தியிருந்தேன். ஆனால், அரச தொலைக்காட்சியொன்று அதனைப் பெருப்பித்து மக்களைத் திசை திருப்பும் விதத்தில் செய்தி வெளியிட்டது – என்றார்.

## இன்று தொடக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தீர்மானத்தின் பிரகாரம் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நவம்பர் 23ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருகின்றன.

எனினும் கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் சுகாதாரத் துறையின் ஆலோசனைக்கு அமைய அந்த மாவட்டப் பாடசாலைகள் நவம்பர் 24ஆம் திகதி தொடக்கம் மூடப்பட்டன.

வடமாகாணத்தில் கடந்த டிசெம்பர் 2ஆம் திகதி ஏற்பட்ட புரெவி புயல் காரணமாக நவம்பர் 3, 4ஆம் திகதிகளில் மாகாண பாடசாலைகள் அனைத்துக்கும் ஆளுநரின் அறிவிப்புக்கு அமைய விடுமுறை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த இரண்டு தினங்கள் அதிகளவு மழை வீழ்ச்சியால் ஏற்பட்ட வெள்ளத்தினால் நேற்று திங்கட்கிழமையும் இரண்டு மாவட்டங்களின் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் கல்வி அதிகாரிகளுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் பாடசாலைகள் இன்று இடம்பெறும் என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அவர் கேட்டுள்ளார்.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மூன்றாவது அலைமூலம் (மினுவாங்கொட, பேலியகொட, சிறைச்சாலை கொத்தணிகள்) இதுவரையில் 25 ஆயிரத்து 25 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

அதேவேளை, மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்து 580 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 20 ஆயிரத்து 804 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 634 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## 14 சடலங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்தச் சடலங்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தின் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சடலங்கள் உருகுலைந்து போகும் பட்சத்தில், சுகாதாரப் பிரிவினர் மேலும் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களைப் பொறுப்பேற்க கடந்த நாள்களாக மறுப்பு தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், இந்தத் தகவல் நேற்று வெளியாகியுள்ளது.

## மஞ்சள் கடவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பஸ் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளமையைத் தொடர்ந்து பளை வைத்தியசாலையில் நேற்றிரவு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:–

இத்தாவில் பகுதியைச் சேர்ந்த பொன்னையா சிவராசா (வயது – 68) என்பவர் நேற்றிரவு 7.30 மணியளவில் இத்தாவில் வீதியில் மஞ்சள் கடவை ஊடாக சைக்கிளில் வீதியைக் கடந்துள்ளார். அவ்வேளை திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த அரச பஸ் அவரை மோதித் தள்ளியிருக்கின்றது.

சம்பவத்தை அடுத்து அங்கு நின்றவர்கள் அவரை உடனடியாக வாகனம் ஒன்றில் பளை ஆதார வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றிருக்கின்றனர்.

அவரைப் பரிசோதித்த வைத்தியர் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்திருக்கின்றார். இருந்தபோதிலும் அங்கு கூடிய சிலர் மருத்துவர்கள் உரிய முறையில் மருத்துவம் பார்க்காமலேயே அவர் உயிரிழந்தார் என்று எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் நேற்றிரவு அங்கு குழப்ப நிலை நிலவியது.

உயிரிழந்தவரின் சடலம் பளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களுக்கு அரசின் சேவை சென்றடையவேயில்லை

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொரோனா அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் சேவை சென்றடையவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குழுநிலை விவாதத்தில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தனிமைப்படுத்தலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தால் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

ஆனால், அந்தப் பொருள்கள் உண்மையாக 7 ஆயிரம் ரூபா பெறுமதியானவையாகவே காணப்பட்டன.

உதாரணமாக நூடில்ஸ் பக்கட் 5 என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் 2 பக்கட்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று சோயாமீட் 5 பக்கட் எனக் கூறப்பட்டுள்ளது 3 பக்கட் மாத்திரமே வழங்கப்பட்டன.

இவ்வாறு அனைத்துப் பொருள்களுமே குறைந்தளவிலேயே மக்களைச் சென்றடைந்துள்ளன.

அதாவது, அரசாங்கத்தின் இந்த சேவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் சென்றடையவில்லை.

ஆகவே, பொருள்களாக அந்த மக்களுக்கு வழங்காமல் மாறாக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 10 ஆயிரம் ரூபாவை வழங்கி, அவர்களே பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொடுப்பது சிறந்தது எனக் கருதுகின்றேன்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நுவரெலிய ஆடைத் தொழிற்சாலை ஒன்று தற்காலிகமாக மூடப்பட்டது!

நுவரெலியா - நோர்வூட் பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்று நேற்று (திங்கட்கிழமை) தற்காலிகமாக மூடப்பட்டது.

நோர்வூட் பகுதியில் ஆசிரியை ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அவருடன் தொடர்பில் இருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

எனவே, இம்மாணவர்களின் பெற்றோர் யாராவது இந்தத் தொழிற்சாலையில் பணிபுரிகின்றனரா என்பதைக் கண்டறிவதற்காகவும், அவ்வாறு இனங்காணப்பட்டால் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவும் நேற்று (திங்கட்கிழமை) தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மேலும், இந்த விடயம் தொடர்பாக நேற்று மாலை, சுகாதார அதிகாரிகளுடன் முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. அதன்பின்னர் வழமைபோல் தொழிற்சாலை, சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் இயங்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையில் இதுவரையில் 70 பேர் வரை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். எனினும், எவருக்கும் வைரஸ் தொற்று இல்லை என்பது பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முல்லைத்தீவில் அத்தியாவசியப் பொருள்கள்!







*முல்லைத்தீவு, நவ.08*

*முல்லைத்தீவு இந்துபுரம் கிராம சேவையாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில குடும்பங்களுக்கு கூரை விரிப்பு உள்ளிட்ட பொருள்கள் நேற்று (திங்கட்கிழமை) வழங்கி வைக்கப்பட்டன.*

*கிராமசேவையாளர் ஜெயசீலனால் எடுக்கப்பட்ட முயற்சிக்கு அமைவாக அத்தியாவசியமான பொருள்கள் பொது மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டன.*

*இந்துபுரம் கிராம சேவையாளர் பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெய்த பலத்த மழையால் 7 வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## மஹர சிறைச்சாலை மோதலில் இறந்த ஏழு பேர் அடையாளம் காணப்பட்டனர்

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்த 11பேரில் 7 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் 3 பேரின் பிரேத பரிசோதனைகள் நேற்று நடத்தப்பட்டனவென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நால்வரின் பிரேதப் பரிசோதனைகள் இதுவரை நடைபெற்று முடிந்துள்ளன எனவும் எஞ்சியவர்களை அடையாளம் காணும்பொருட்டு டி.என்.ஏ. பரிசோதனை அல்லது கைரேகைப் பரிசோதனை நடத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரசாந்தனின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுசெயலாளர் பூ.பிரசாந்தனின் விளக்கமறியல் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு நேற்று (திங்கட்கிழமை) சூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்றது.

அதாவது, சிறைச்சாலையில் இருந்து நீதிமன்றுக்கு அழைத்து வராமல் நீதிவான் ஏ.சி.றிஸ்வான், சூம் தொழில்நுட்பம் ஊடாக வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

இதன்போது பிரசாந்தனை எதிர்வரும் டிசெம்பர் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுசெயலாளரும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான பூபாலப்பிள்ளை பிரசாந்தன், கடந்த நவம்பர் மாதம் 9 ஆம் திகதி காலை கொழும்பில் இருந்து வருகை தந்த சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவர், ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய பிரசாந்தன் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவால் உயிரிழந்த 12 பேரின் சடலங்கள் உரிமை கோரப்படவில்லை

கொரோனா தொற்றால் உயிரிழந்த 12 பேரின் உடல்கள் இதுவரை அவர்களது உறவினர்களால் உரிமை கோரப்படவில்லை என சுகாதார அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு உரிமை கோரப்படாமல் காணப்படும் உடல்கள் பெரும்பாலும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட முஸ்லிம்களின் உடல்கள் என அறிய முடிகின்றது.

இருப்பினும் உரிமை கோரப்படாத உடல்களை அரசாங்க செலவில் தகனம் செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்கனவே அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், உரிமை கோரப்படாத உடல்களைத் தகனம் செய்வதற்கு முன் சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிலர், முஸ்லிம்களாக இருக்கின்றமையால், அரசாங்கம் வழங்கிய வழிகாட்டுதல்களின்படி தகனம் செய்ய வேண்டியிருப்பதால் உடல்களை ஏற்க மறுத்துவிட்டனர்.

இருந்தாலும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்பட வேண்டும், அடக்கம் செய்யப்படக் கூடாது என பரிந்துரைத்துள்ளது.

இந்த குழு அடுத்த இரண்டு மாதங்களில் நிலைமையை மதிப்பாய்வு செய்து இறுதி முடிவை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் குறித்த தகன முறைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 12 மனுக்களை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சுகாதார விதிமுறை மீறிய குற்றம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது!

சுகாதார விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில், ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறிப்பாக முகக் கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை காரணமாக நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 39 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 111 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 08.12.2020 | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12<br>உயிர்முறைமைகள் தொழிநுட்பம் |
| 05.00 - 05.55 | தரம் - 13<br>உயிர்முறைமைகள் தொழிநுட்பம் |
| 06.00 - 06.55 | தரம் - 12<br>தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் |
| 08.00 - 08.55 | தரம் - 08<br>கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 08<br>விஞ்ஞானம் (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09<br>கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 09<br>விஞ்ஞானம் (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 கணிதம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 புவியியல் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 புவியியல் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 புவியியல் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07<br>விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 பௌதிகவியல் (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 பௌதிகவியல் (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13<br>தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06<br>கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 06<br>விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12<br>அரசியல் விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13<br>அரசியல் விஞ்ஞானம் (த) |

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அதிகாரப் பகிர்வு சர்ச்சையும் நீதிமன்றில் கட்டவிழக்கூடும்

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான ஒரு சர்ச்சை புதிய சட்ட வடிவத்தில் – பிணக்கில் – நீதிமன்றில் கட்டவிழும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட வீதி நிர்வாகத்தை அல்லது பராமரிப்பை மத்திய அரசின் ஏதேனும் அலகு – அமைச்சு – தான் தோன்றித்தனமாகத் தன் விடயமாகக் கையாளலாமா என்ற சர்ச்சை இப்போது வெடித்திருக்கின்றது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட ஒரு வீதியை, பிரதேச சபையின் முன் அனுமதி பெறாமல், தன்பாட்டில் புனரமைக்கப் போவதாக யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலான அணி அடிக்கல் நாட்டி, பெயர்ப்பலகை நட்டுச் சென்றுள்ளது.

இது தவறு, எமது பிரதேச சபைக்கு உட்பட்ட வீதியை எமது அனுமதியில்லாமல் உங்கள் பாட்டில் புனரமைக்க முடியாது என்று எழுத்து மூலம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்த பிரதேச சபைத் தவிசாளர், 24 மணி நேரம் கழித்து அந்தப் பெயர்ப் பலகையை தனது ஊழியர்கள் மூலம் கழற்றி எடுத்து வந்து தனது பிரதேச சபையில் வைத்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை அது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்ய, வாக்குமூலங்களைப் பதிந்த பொலிஸார், இப்போது பிரதேச சபைத் தவிசாளரைக் கைது செய்யத் தயாராகின்றனர். பொதுச் சொத்துக்கு அல்லது அரச சொத்துக்குச் சேதம் விளைவித்தார் என பொலிஸார் அவர் மீது குற்றம் சுமத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேசமயம், பிரதேச சபைத் தலைவர் தியாகராசா நிரோஷ் தமக்கு முன்பிணை கோரி மல்லாகம் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார். மனுவை விசாரணைக்குப் பெற்றுக் கொண்ட நீதிமன்றம் பொலிஸாருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது. நோட்டீஸ் பெறப்பட்டுள்ளது.

விடயம் இப்போது நீதிமன்றத்தில். மன்றின் முன்னால் விசாரணையில் இருக்கும் விவகாரத்தை பொதுவெளியில் கையாள்வதாயின் மிகக் கவனமாக இருக்க வேண்டும். அந்த விசாரணைகளுக்கு குந்தகமோ, பாதிப்போ ஏற்படாத விதத்தில், இந்த விவகாரத்தில் உள்ள விடயங்ளின் சாதக பாதகங்களை நோக்குவோம்.

★வீதி அபிவிருத்தி அதிகாரசபை விடுத்துள்ள சுற்றறிக்கையின்படி அப்படி பெயர்ப்பலகை நடுவதற்கு அதிகாரம் உண்டு என்று சபை தரப்பில் கூறப்படுகின்றது. அந்தச் சபையின் சுற்றறிக்கை பிரதேச சபையைக் கட்டுப்படுத்துமா என்பது கேள்விக் குறியே.

★ஆனாலும் சம்பந்தப்பட்ட வீதி பிரதேச சபைக்கு உரியது என்றாலும், அதை வீதி அதிகார சபை புனரமைக்கப் போவதாக அறிவிக்கும் பெயர்ப் பலகை நடப்பட்டது என்னவோ வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதிப் பகுதியில்தான். அதை பிரதேச சபைத் தவிசாளர் அகற்ற முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

★பிரதேச சபையில் அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டமைப்புகளை அகற்றுவதற்கு சில முறைகள் உண்டு. அப்படி கட்டியவருக்கு 14 நாள்கள் முன்னறிவித்தலுடன் நோட்டீஸ் கொடுக்க வேண்டும், கட்டமைப்பை அகற்றுவதற்கான நீதிமன்ற அனுமதி பெறப்பட வேண்டும். இவை எதுவும் செய்யாமல் அவசரப்பட்டு அறிவிப்புப் பலகை அகற்றப்பட்டமை நீதிமன்றினால் எப்படி நோக்கப்படும் என்பது தெரியவில்லை.

★இருபத்தியையாயிரம் ரூபா பெறுமதிக்கும் கூடிய அளவுக்கு அரச சொத்தைச் சேதப்படுத்தினால்தான் முன் பிணை அனுமதி வழங்கப்படாத விளக்கமறியல். இந்தப் பெயர் பலகை சேதப்படுத்தப்படவில்லை. அகற்றப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. அதை அகற்றியமைக்காக அரச சொத்தை சேதப்படுத்தியதாக அர்த்தம் பண்ண முடியுமா? அதன் பெறுமதி யாது? இருபத்தியையாயிரம் ரூபாவுக்குக் கூடவா? குறைவா?

★முன் பிணை அனுமதி கோரி பிரதேச சபைத் தவிசாளர் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் ஏற்று பொலிஸாருக்கு நோட்டீஸ் பிறப்பித்து விட்டது. ஆகையினால் நாளை வழக்கு மன்றில் எடுக்கப்பட்டு ஒரு முடிவு வரும் வரை தவிசாளரை நீதிமன்ற வாரண்ட் உத்தரவின்றி பொலிஸார் அதற்கு முன்னர் கைது செய்ய முடியாது. தவிசாளருக்கு அதுவரைப் பாதுகாப்புண்டு.

★தன்னுடைய கட்டுப்பாட்டில் இல்லாத ஒரு வீதியை மத்திய அரசின் முகவர் அமைப்பு அல்லது அமைச்சு எதுவும் புனரமைப்பதாயின் முதலில் அந்த வீதியை சம்பந்தப்பட்ட தரப்பிடமிருந்து உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்க வேண்டும் அதற்கு அந்தத் தரப்பிடம் அனுமதி பெறவேண்டும். அனுமதி பெறாமல், வீதியைப் பொறுப்பேற்காமல் தன்னிஷ்டப்படி – அரசியல்வாதிகளின் விருப்பப்படி – படம் மாட்டி, ஆர்ப்பாட்டமாய் சின்னத்தன அரசியல் செய்வதை நீதிமன்றம் எப்படி நோக்கும்?

– நாளைய விசாரணையில் இவை எல்லாம் பிய்த்து உதறப்படலாம். பிரதேச சபைக்கு பகிரப்பட்ட அதிகாரம் பற்றிய விடயமும் இதில் பிரதானமாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

# தமிழ் மக்களுக்கு இந்நாட்டில் அச்சுறுத்தல்கள் அதிகரிப்பு!

## இராதாகிருஷ்ணன் கவலை



தமிழ் மக்களுக்கு இந்நாட்டில் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அத்துடன், மஹர சிறைச்சாலை சம்பவத்தின் தாக்கம் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் எதிரொலிக்கும் என்பதால் அரசாங்கம் அதற்கு பொறுப்புக்கூறியாகவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தலவாக்கலையில் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படியே நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

மக்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் கருத்துகளை கூறுவதற்கும் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குமான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது.

தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பு தொடர்பில் அல்லாமல் ஏனைய விடயங்களை பேசுவதற்கான அனுமதி அவர்களுக்கு இருக்கின்றது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் துவேசம் கக்கும் உறுப்பினர்களே அதிகம் இருக்கின்றனர். அவ்வாறு துவேசம் பேசும் ஓர் அமைச்சர்தான் கூட்டமைப்பினரை தடைசெய்ய வேண்டும் எனச் சொல்கின்றார்.

அவருக்கு அதற்கான அதிகாரம் கிடையாது. மக்கள் நினைத்தால் மட்டுமே அதனை செய்ய முடியும். அவரின் கருத்தை நாம் கண்டிக்கின்றோம்.

சரத் பொன்சேகாவும் தமிழ் மக்களின் மனம் புண்படும் விதத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். அதனையும் கண்டிக்கின்றோம்.

பிள்ளையானை விடுதலை செய்தது எமக்கு பிரச்சினை இல்லை. அவ்வாறு தமிழ் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. அப்போதுதான் ஒரே நாடு, ஒரே சட்டம் என்பது நடைமுறை சாத்தியமாகும்.

மஹர சிறைச்சாலையில் கைதிகள் தாக்கப்பட்டுள்ளனர், கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும். இந்தச் சம்பவத்தின் தாக்கம் ஜெனிவா மனித உரிமை மாநாட்டிலும் எதிரொலிக்கும்.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலான சூழ்நிலையே தொடர்ந்தது. தற்போது அது அதிகரித்துள்ளது. – எனஅவர் மேலும் தெரிவித்தார்.

# கே.பியைப் போல் மகேந்திரனும் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார்!

## சரத் வீரசேகர கூறுகிறார்



கே.பி. என்ற குமரன் பத்மநாதனை அழைத்துவந்தமை போல், நாட்டுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தி கோடிக் கணக்கிலான நிதி மோசடியைச் செய்த மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனும் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

வெளிநாடொன்றில் வசிக்கும் ஒருவரை நாட்டுக்கு அழைத்து வரவேண்டுமாயின் அதற்காக இரு நாடுகளுக்கு இடையில் சர்வதேச உடன்படிக்கை ஒன்று இருத்தல் அவசியமாகும்.

இந்நிலையில், இதுதொடர்பாக இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸ் பிரதானியுடன் கலந்துரையாடியதாகத் தெரிவித்துள்ள அவர், மகேந்திரனை சர்வதேச நியதிகளுக்கு அமைய நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக சிங்கப்பூர் அரசாங்கத்திடம் ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அவரை நாட்டுக்கு அழைத்து வந்து அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

# பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சிலர் கம்பஹாவில் தனிமைப்படுத்தப்பட்டனர்!

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொது சுகாதார பயிற்சி பரிசோதகர்கள் சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வத்தளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால், பயிற்சி பொது சுகாதார பரிசோதகர்கள 50 பேர், கடமைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கடமையில் ஈடுபட்டிருந்த அவர்களில் ஒருவருக்கு, கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளமையை அடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அவர்களில் 21 பேர் நய்வல வெயாங்கொடை பகுதியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களிலும், 28 பேர் பயிற்சி நிலையங்களிலும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

16
2020
பால்நிலை வன்முறைக்கு எதிரான
16 நாள் செயற்பாடு - 2020
16 Days of Activism Against Gender Based Violence
JSAC
ஊடகங்களே உங்கள் ஊதியத்திற்காய் பெண்களை ஊனமாக்காமல் ஊர் புகழ்ந்திட உத்தமமான கருத்துக்களால் ஊக்கம் கொடுத்திடுவீர்
பெண்ணியம் வாழ
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

# வேற்று நாட்டு மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் தடை

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிரடி



இலங்கை கடற்பரப்புக்குள் பிற நாட்டவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுப்படுகின்றமையை தடுக்க உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கலமெடிய மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துக் கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த பிரதமர் மேலும் கூறுகையில்:-

குறுகிய காலத்தில் 379.53 மில்லியன் ரூபா செலவில் கலமெடிய மீன்பிடி துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டது. இலங்கை அரசியல் வரலாற்றில் பல பிரதான கட்சிகள் ஆட்சியதிகாரம் செலுத்தியுள்ளன. ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் கலமெடிய மீன்பிடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளன.

நாட்டில் தற்போது 22 மீன்பிடி துறைமுகங்கள் உள்ளன. தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் மீன்பிடி கைத்தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. கடல்சார் கைத்தொழில் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளது

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாக காணப்பட்டாலும் பிற நாடுகளில் இருந்து மீன் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இலங்கை கடற்பரப்பில் பிற நாட்டவர்கள் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுகிறார்கள். இதனைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடல்வளங்களைப் பாதுகாக்க அரசாங்கம் சிறந்த திட்டம் வகுத்துள்ளது. விவசாயத்துறைக்கும், மீன்பிடி கைத்தொழிலுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

மீன்பிடி கிராமங்கள் பல அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. மொறட்டுவ, அம்பாந்தோட்டை, உள்ளிட்ட பெரும்பாலான மீன்பிடி கிராமங்களில் வாழும் மீனவர்களுக்கு நிரந்தர வீடு வழங்கப்பட்டுள்ளது. 30 வருடகால யுத்தத்தால் வடக்கு மக்களின் பிரதான வாழ்வாதாரமான மீன்பிடி கைத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது வடக்கில் மீன்பிடி கைத்தொழில் மேம்படுத்தப்பட்டுள்ளது. - என்றார்.

# மஹர சிறைக் கலவரத்தினால் 10 கோடி ரூபா சொத்து இழப்பு

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக, பத்துக் கோடி ரூபா அளவில் இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தீயினால் பல்வேறு ஆவணங்களும் நாசமடைந்துள்ளன என்றும் இழப்புக் கணிப்பீடு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த 11 பேரில் இரண்டு பேரின் சடலங்கள் இன்னும் றாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் உயிரிழந்த ஏனைய 9 பேர் கொரோனா நோயாளர்கள் என்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களது சடலத்தை எவ்வாறு அடக்கம் செய்வது என்பது தொடர்பான தீர்மானம் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதேவேளை இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஒரு கைதி, வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காலி கல்வி வலய பாடசாலைகள் பூட்டு!

காலி கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படுவதாக மாகாண ஆளுநர் வில்லி கமகே அறிவித்துள்ளார்.

கல்வி வலயத்திலுள்ள 26 பாடசாலைகளும் இன்று ஏழாம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று அபாய நிலை காரணமாக மேற்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் பூட்டப்பட்டிருக்கும் பாடசாலைகளைத் தவிர ஏனைய அனைத்து பாடசாலைகளும் கடந்த நவம்பர் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், தரம் ஆறு முதல் 13 வரையான வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமே கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பிலிருந்து நாவலப்பிட்டிக்கு சென்ற பெண் ஒருவருக்குத் தொற்று!

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெட்டபுலா மத்திய பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 25 வயதுடைய யுவதிக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு - கிருலப்பனை பகுதியில் பணிபுரிந்த இவர் கடந்த 25 ஆம் திகதி தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். இதனையடுத்து அவர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, அவரிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்ட நிலையில், பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் அவருக்கு வைரஸ் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பிரதேசத்துக்கு பொறுப்பான சுகாதார அதிகாரிகள், சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் யுவதியை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

# சாதாரண தரப் பரீட்சை மார்ச்சுக்கு தள்ளிவைப்பு

கல்விப் பொதுத்தராதரப் சாதாரணதரப் பரீட்சையை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடத்த கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்துள்ள கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சாதாரணதரப் பரீட்சை மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் 11 வரை நடைபெறும் எனக் கூறினார்.

க.பொ.த. சாதாரண பரீட்சையை அடுத்த ஆண்டு ஜனவரி 18 முதல் 27 வரை நடத்த முன்னர் முடிவு செய்யப்பட்டது.

கொரோனா தொற்று பரவல் காரணமாக நாட்டின் நிலைமையையும் மாணவர்களின் பாதுகாப்பையும் கருத்திற் கொண்டும் அதை மேலும் தள்ளிப்போட தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவைக் கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைக்க வேண்டும்!

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவிப்பு

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த வேண்டுமாயின் நாட்டு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த மாதத்துக்குள் நாடு வழமை நிலைமைக்குத் திரும்பும் என துறைமுக அபிவிருத்தி கப்பற் துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்:-

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசியல் நோக்கங்களுக்காக மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கிறார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்தியவர்கள் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியினராக சிறந்த கொள்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பது வேடிக்கையாகவுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தையும், அதில் செல்வாக்கு செலுத்தியவர்களையும் நாட்டு மக்கள் முழுமையாக புறக்கணித்துள்ளார்கள். எனவே அவர்கள் மீண்டும் இவர்களிடம் ஆட்சியதிகாரத்தை வழங்கமாட்டார்கள்.



2021 ஆம் ஆண்டு முதல் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் செயற்படுத்தப்படும். கொவிட் - 19 வைரஸ் தாக்கம் அனைத்து துறைகளுக்கும் பாரிய சவாலாக உள்ளது. இதனைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவும் நாட்டு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இந்த மாதத்துக்குள் நாடு வழமை நிலைமைக்குத் திரும்பும். அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டாலும் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் தொடர்ந்து கடுமையாக செயற்படுத்தப்படும். - என்றார்.

# மினுவாங்கொடை கொரோனாக் கொத்தணிக்கு உக்ரேன் விமானப் பணியாளர்கள்தான் காரணம்!

## இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோபுள்ளே தகவல்

மினுவாங்கொட ஆடை தொழிற்சாலை கொரோனா கொத்தணி உருவாகுவதற்கு உக்ரேன் நாட்டவர்களே காரணம் என இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (திங்கட்கிழமை) கருத்து வெளியிட்ட அவர், இது தொடர்பாக தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெறுகின்றன எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மினுவாங்கொட கொத்தணி உருவான பிரண்டிக்ஸ் நிறுவன தொழிலாளர்களுக்கு இந்தநோய் பரவிய விதம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நபர்களிடம் இருந்தே இந்த வைரஸ் பரவியிருக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது.

அதன் ஊடாக விசாரணைகளை முன்னெடுக்கும் போது சீதுவ ரமாதா ஹோட்டலில் தங்கியிருந்த உக்ரேன் நாட்டு விமான பணியாளர்களுக்கு கொவிட் 19 தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அந்த ஹோட்டலின் பணியாளர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது அங்குள்ள பலருக்கும் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்களுக்கும் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கும் தொடர்பு இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த விதத்தில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய மினுவாங்கொட பிரிண்டிக்ஸ் நிறுவன ஊழியர்களுக்கு மேற்குறிப்பிட்ட விதத்தின் ஊடாக வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடியும்.

பேராசிரியர் நீலிக்க மலவெக்கே வைரஸ் தொடர்பில் மேற்கொண்ட ஆய்வின் போது இப்போது நாட்டில் பரவி வரும் வைரஸானது இதற்கு முன்னர் நாட்டில் பரவிய கொரோனா வைரஸ் வகையை சேர்ந்தவையல்லவென தெரிவித்தார்.

இப்போது பரவும் வைரஸானது ஐரோப்பிய நாடுகளில் பரவும் வைரஸுக்கு இணையானது என அவர் தெரிவித்தமையில் இருந்து மேற்குறிப்பிட்ட விடயத்துக்கு இது சாட்சியாக அமைகின்றது.- எனக் கூறினார்.

# மனித உரிமை மீறப்படும் நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் வருவதில்லை!

## மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



கொவிட் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் சுற்றுலாத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கத்திடம் எந்த நிவாரணமும் இல்லை. மஹர சிறைச்சாலை கலவரமும் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பாகும் என மனுநாணயக் கார நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்:-

சுற்றுலாத்துறையை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல மனித உரிமை முக்கியமாகும். அதனை எமது அரசாங்கம் செய்திருந்தது. அதனால்தான் எமது சுற்றுலாத்துறை சர்வதேச மட்டத்தில் உயர்ந்த நிலைக்கு வந்தது. ஈஸ்டர் தாக்குதலால் சுற்றுலாத்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டது. என்றாலும் குறுகிய காலத்தில் சுற்றுலாத்துறையை பழைய நிலைக்குக் கொண்டுவர முடியுமாகியது.

மேலும் கொரோனா காரணமாகத் தற்போது சுற்றுலாத்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட சிறிய வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். சுற்றுலாப் பயணிகளை வாகனங்களில் ஏற்றிச்சென்றவர்கள் வாகனங்களின் லீசிங் செலுத்த முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் அவர்கள் தங்களது வாகனங்களில் தற்போது தேங்காய் விற்பனை செய்கின்றனர். ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு எந்தவித நிவாரணத்தையும் வழங்கவில்லை. அனைவருக்கும் வழங்கும் 5 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று கொரோனாவால் சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டிருப்பது உண்மையாக இருந்தாலும் அதனை ஆரம்பத்திலே தடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டும் அரசாங்கம் கண்டு கொள்ளவில்லை. கொரோனா அச்சுறுத்தல் வந்த ஆரம்பத்திலே ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் விமான நிலையத்தை மூடுமாறு எதிர்க்கட்சித் தலைவர் இந்த சபையில் தெரிவித்தார். ஆனால் அரசாங்கம் அதனை விமர்சித்து வந்தது. அன்று விமான நிலையத்தை மூடியிருந்தால் இந்தளவு பாதிப்பு நாட்டுக்கு வந்திருக்காது. அதேபோன்று தற்போது மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரம் காரணமாகவும் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பு ஏற்படும். மனித உரிமை மீறப்படும் நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் வருவதில்லை. - என்றார்.

# திருப்பி அனுப்பப்பட்ட மாணவர்கள் ஹற்றனில் பல பாடசாலைகள் பூட்டு!

ஹற்றன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நோர்வூட் நிவ்வெளி தமிழ் வித்தியாலயம், அயரபி தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றுக்கு நேற்று (திங்கட்கிழமை) சென்ற மாணவர்கள் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் வருகை வெகுவாகக் குறைந்திருந்ததாலும் வருகை தந்திருந்த மாணவர்களின் சுகாதார பாதுகாப்பைக் கருத்திற்கொண்டும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகப் பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர்.

நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியை ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானமையையடுத்து அவருடன் தொடர்பில் இருந்த ஆசிரியர்களும் மாணவர்களும் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் பாடசாலையும் மூடப்பட்டுள்ளது.

இதனால் நோர்வூட் பகுதியில் உள்ள ஏனைய பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 90 வீதத்தால் குறைவடைந்துள்ளது. ஒரு சிலரே பாடசாலைக்கு சமூகமளித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே நேற்று பாடசாலைக்கு சமூகமளித்த மாணவர்கள் திருப்பி அனுப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நோர்வூட் தமிழ் பாடசாலை வளாகம் மற்றும் நோர்வூட் நகரம் தொற்றுநீக்கம் செய்யப்பட்டது. இதற்கான நடவடிக்கையை நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் ரவி குழந்தைவேலு தலைமையிலான குழுவினர் முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய பொருளாதாரத்தை 2021 இல் அதிகரிப்போம்!

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தேசிய பொருளாதார வளர்ச்சி மட்டத்தை 5 அல்லது 6 வீதத்தால் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் தேசிய பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களையும், நிவாரண கொடுப்பனவையும் வழங்கியுள்ளது.

ஆகவே 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அரசாங்கம் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும். தேசிய பொருளாதார வளர்ச்சி மட்டத்தை 5 தொடக்கம் 6 வீதத்தால் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# வெள்ளத்தில் சிக்கிய 550 மாடுகள் இராணுவத்தினர் உதவியுடன் மீட்பு

## மன்னார் பெரியமடுப் பகுதியில்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், டிச.08

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட அதிக மழையின் காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் பெரியமடுப் பகுதியில் உயிரிழந்த 13 மாடுகளின் உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

550 மாடுகள் இராணுவத்தினரின் உதவியுடன் வெள்ளத்தில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் கடந்த 2ஆம் திகதி ஏற்பட்ட புரெவிப் புயலின் காரணமாக சுமார் 40 இற்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்தன என அறிக்கையிடப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் 13 மாடுகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இதேநேரம் பெரிய மடுப் பகுதியில் 600ற்கும் மேற்பட்ட மாடுகள் அதிக வெள்ளத்திற்குள் அகப்பட்டு தரைத் தொடர்புகள் மூன்று பக்கங்களால் துண்டாடப்பட்ட நிலையில், அவற்றில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாடுகள் படை யினரின் உதவியால் மீட்கப்பட்டன.

இதேநேரம் கால் நடைகளின் உரிமையாளர்கள் படகில் சென்றும் சில மாடுகளை மீட்டு வந்தனர்.

தற்போது வெள்ள நிலமை சற்று குறைவடைந்த சமயம் அப் பகுதிகளில் இருந்து 13 மாடுகள் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன - என்றார்.

# சிறைக் கைதிகள் அரசின் பொறுப்பிலேயே உள்ளவர்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஆட்சியாளரின் கடமை!

## தேசிய மக்கள் சக்தி வலியுறுத்து

மஹர சிறைச்சாலையில் கைதிகள் சுட்டுக் கொலைச் செய்யப்பட்டமை தொடர்பில் உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் ஆணைக்குழுவொன்றை அமைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த விசாரணை பக்க சார்பற்றதும், சுயாதீனமானதுமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டு இதனை வலியுறுத்தியிருக்கும் தேசிய மக்கள் சக்தி அந்த அறிக்கையில், மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மஹர சிறைச்சாலையில் நவம்பர் 29 ஆம் திகதி நிராயுதபாணிகளான கைதிகளை சுட்டுக் கொலை செய்தமை தொடர்பில் நாட்டு மக்கள் கவலையடைந்துள்ளனர். இதன்போது 11 கைதிகள் உயிரிழந்தமையுடன், நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் பல வருடங்களுக்கு முன்னர் வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கைதிகளின் கொலைச் சம்பவத்தை நினைவுபடுத்துகிறது.

சிறை வைக்கப்படும் கைதிகள் அனைவரும் அரசாங்கத்தின் பொறுப்பிலிருப்பவர்கள். எனவே அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்த சம்பவம் தொடர்பில் அதிகாரிகளின் மாறுப்பட்ட கருத்துக்களுக்கு மத்தியில், மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளமை ஆச்சரியத்திற்குரியதல்ல. கடுமையான குற்றச் செயலை செய்து ஒருவர் சிறை வைக்கப்பட்டாலும், நாட்டின் பிரஜை என்ற வகையில் அடிப்படை மனித உரிமைகளின் பிரகாரம் அவருக்கு உயிர் வாழ்வதற்கு உரிமை இருப்பதுடன், அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய நபர்களுமாவர்.

கலவரங்களை அடக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில், குற்றவியல் வழக்கு விசாரணைகள் தொடர்பான குறிப்பேடுகளிலும், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிராயுதபாணிகளைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்கின்றமை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அதனால் இந்த சம்பவத்துக்கு அனைவரும் கண்டனம் தெரிவிக்கவேண்டும்.

நாட்டின் குற்றவியல் சட்டத்தின் பிரகாரம், இவ்வாறு அரசாங்கத்தின் பொறுப்பில் இருப்பவர்கள் கொலைச் செய்யப்பட்டால், இது தொடர்பாக நீதிவான் ஒருவரின் முன்னிலையில் திறந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதேவேளை இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலங்கள் தொடர்பான மரண பரிசோதனைகளை வைத்தியர் ஒருவர் மேற்கொள்ள வேண்டும்.

சட்ட விதிமுறைகளுக்கமைய இடம்பெறும் நீதிவான் பரிசீலனைகள் திறந்த முறையில் இடம்பெறும் போது, அந்த உயிரிழப்புகள் தொடர்பில் எந்தவொரு நபரும் வாக்குமூலம் வழங்குவதற்கு உரிமை உண்டு. இந்நிலையில் இந்த விசாரணைகள் தொடர்பில் முறையான ஒழுங்கு விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

இந்த விசாரணைகளின் இறுதியில் கிடைக்கப் பெறும் முடிவுகளை உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரைப் போன்று நாட்டு மக்களும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். கைதிகளின் உயிரிழப்பு தொடர்பில் அதிகாரிகள் கூறுகின்றமை சாத்தியமா என்பது தொடர்பில் உயிரிழந்தவர்களின் மரண மற்றும் பிரேத பரிசோதனை முடிவுகளின் பிரகாரமே தீர்மானம் எடுக்கமுடியும்

அதனால் இது தொடர்பான முடிவறிக்கைகளை பகிரங்கப்படுத்த வேண்டும். எனினும் தற்போது இது தொடர்பான உண்மைகளை மூடி மறைக்கும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றே தோன்றுகின்றது.

இந்த சம்பவத்தின் பின்னர் நாட்டின் சட்டம் மற்றும் ஜனநாயகம் தொடர்பில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் நாட்டுக்கு அவப்பெயர் கிடைத்துள்ளது.

நாட்டுக்குக் கிடைத்துள்ள இந்த அவப்பெயரை நீக்க வேண்டுமெனில், இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஒழுங்கு விதிகளுக்கமைய உடனே செய்து முடிக்க வேண்டும். இது ஒரு கடுமையான சம்பவம் என்பதால், அது தொடர்பான விசாரணைகள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் நியமிக்கப்படும் ஆணைக் குழுவால் பக்கச்சார்பற்ற முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இடமளிக்க வேண்டாம் என்று ஜனநாயகத்தை மதிக்கும் மனிதநேயம் மிக்க அனைவரையும் அழுத்தம் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.- என்றுள்ளது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சதித்திட்டம் இலங்கையில் தீட்டப்பட்ட ஒன்று அல்ல!

## பாதுகாப்பு படைகளின் முன்னாள் தலைமை அதிகாரி தகவல்

கொழும்பு, டிசெ.08

இலங்கையில் கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கான சதித் திட்டம் இலங்கையில் தீட்டப்பட்டதல்ல எனவும், இந்த தாக்குதல்களின் பின்னால் உள்ளவர்கள் உலகில் பண பலம் படைத்த, வெளிநாடுகளில் படித்த, ஐ.எஸ்.ஐ.எஸ். உடன் தொடர்புகளைக் கொண்டவர்கள் எனவும் அந்த வலையமைப்பை கண்டறிய முடியாமல் போயுள்ளதாகவும் பாதுகாப்பு படைகளின் முன்னாள் தலைமை அதிகாரி அட்மிரல் ரவீந்ர விஜே குணரத்ன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் எனப்படும் 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் ஆஜராகி சாட்சியமளிக்கும் போதே அட்மிரல் ரவீந்ர விஜேகுணரத்ன இதனைத் தெரிவித்தார்.

21-4 உயிர்த்த ஞாயிறு தினம் இடம்பெற்ற தொடர் தற்கொலை தாக்குதல்களை மையப்படுத்தி அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அதிகாரம்) 2 ஆம் அத்தியாயத்தின் கீழ் கடந்த 2019 செப்ரெம்பர் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் சாட்சி விசாரணைகள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஆணைக் குழுவில் இடம்பெற்று வருகின்றது.

ஆணைக் குழுவின் தலைவர் மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி ஜனக் டி சில்வாவின் தலைமையிலான மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி நிசங்க பந்துல கருணாரத்ன, ஓய்வுபெற்ற நீதிபதிகளான நிஹால் சுனில் ரஜபக்ஷ, அத்தபத்து லியனகே பந்துல குமார அத்தபத்து, ஓய்வுபெற்ற அமைச்சு செயலர் டப்ளியூ. எம்.எம். அதிகாரி ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் பதுகாப்பு படைகளின் முன்னாள் தலைமை அதிகாரி அட்மிரல் ரவீந்ர விஜே குணரத்ன சிரேஷ்ட அரச சட்டவாதி சஞ்ஜீவ திஸாநாயக்கவின் நெறிப்படுத்தலில் சாட்சியமளித்தார்.

இதன்போது, ஆணைக் குழுவின் உறுப்பினர் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிசங்க பந்துல கருணாரத்ன எந்த தகவலும் எமது உளவுப் பிரிவினருக்கு கிடைக்காமல் இத்தகைய தாக்குதலொன்று இடம்பெற சாத்தியம் உள்ளதா?' என எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த பதுகாப்பு படைகளின் முன்னாள் தலைமை அதிகாரி அட்மிரல் ரவீந்ர விஜே குணரத்ன:-

இது இலங்கையில் திட்டமிடப்பட்டதல்ல. சஹ்ரான் கூட நாங்கள் நினைக்கும் பயங்கரவாதி அல்லர்.

நாம் தேடுபவர்கள் உலகில் பண பலம் படைத்த, வெளிநாடுகளில் படித்த, ஆங்கிலம் பேச முடியுமான ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புகளைப் பேணும் அறிவுடையவர்கள். அவர்களே இதன் பின்னணியில் உள்ளார்கள். அந்த வலையமைப்பை கண்டுபிடிக்க எம்மால் முடியாமல் போயுள்ளது. தாக்குதல்களின் பிரதானியை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

எந்தவொரு பயங்கரவாத அமைப்பினதும் தலைவன் தற்கொலைத் தாக்குதலில் நேரடியாக பங்கேட்க மாட்டார். குறைந்த பட்சம் இந்த தாக்குதல்களின் பின்னணியில் இருந்து அதனை வழிநடத்திய 'ஹெண்டலர்' ஆக செயற்பட்டவர் கூட எம்மால் கண்டுபிடிக்க இதுவரை முடியவில்லை. (நான் ஓய்வெபெறும் போது இருந்த விடயங்களை வைத்து இதனைக் கூறுகின்றேன்.) இதற்கு ஐ.எஸ். ஐ.எஸ். உதவியுள்ளதாக தோன்றுகிறது.



தாக்குதல்களுக்கு முன்னர் ஐ.எஸ். ஐ.எஸ். இற்காக தாக்குதல்தாரிகள் வழங்கும் சத்தியப் பிரமாண வீடியோவை நன்றாக உற்று நோக்குங்கள். அதில் பெண் ஒருவரின் கையை அவதானிக்க முடியும். வெள்ளை நிற கையில் ஒரு மோதிரம் போடப்பட்ட ஒரு கையை அவதானிக்க முடியும். யார் அந்தப் பெண்? அவர் சத்தியப் பிரமாணம் செய்யும் குழுவிலிருந்து சிறிது தள்ளி நின்று கையுயர்த்துவதை அவதானிக்க முடிகிறது.

என்னைப் பொறுத்தவரை வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பொன்றின் பூரண நெறிப்படுத்தலில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. - எனத் தெரிவித்தார்.

இதனைவிட, ஆணைக் குழுவில் அவர் தொடர்ந்தும் சாட்சியமளிக்கையில் தெரிவித்தவை வருமாறு:-

இந்த தாக்குதல்கள் தொடர்பில் முன்கூட்டியே வெளிநாட்டிலிருந்து தகவல்கள் கிடைத்திருந்தன. அந்த தகவலை அப்போதைய அரச உளவுச் சேவை பிரதானி நிலந்த ஜயவர்தன எம்முடன் ஒரு போதும் பகிர்ந்து கொள்ளவில்லை.

உளவுத் துறையை பொறுத்தவரை, ஒரு தகவலால் யாருக்கு நற்பெயர் கிடைக்கும் என எண்ணி வேலை செய்யும் இடமல்ல. 2019 ஏப்ரல் 4 ஆம் திகதி கிடைத்ததாகக் கூறப்படும் அந்த தகவலை எம்முடன் பகிர்ந்திருந்தால், அதன் பின்னர் அதாவது ஏப்ரல் 8 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்த இந்திய பாதுகாப்பு செயலர் சஞ்ஜே மித்ரா, அப்போதைய இந்திய பதில் பாதுகாப்பு படைகளின் அதிகாரி ஆகியோருடன் பேசி மேலதிக தகவல்களைப் பெற்றிருக்கலாம்.

எனினும் ஏப்ரல் 8 ஆம் திகதி இந்து லங்கா பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்ள வந்த அவர்களிடம் பேசும் அளவுக்கு கூட எமக்கு அந்த தகவல்களை நிலந்த ஜயவர்தன வழங்கியிருக்கவில்லை. அத்துடன் தாக்குதல் தொடர்பான தகவல்களை அவர்கள் அறிந்திருந்தால், அந்த மாநாட்டுக்கு வந்திருப்பார்களா என்பதும் ஆராயப்பட வேண்டியதே.

எவ்வாறாயினும், தாக்குதல் நடத்தப்படப் போவதாக கிடைத்த தகவல் இந்தியாவிலிருந்து தான் கிடைத்தது என மூலத்தை வெளிப்படுத்தியது, நிலந்த ஜயவர்தன செய்த மிகப் பெரும் தவறாகும். பொதுவாக அவ்வாறு நாம் தகவல் எங்கிருந்து கிடைத்தது என்பதை வெளிப்படுத்த மாட்டோம்.

அதனாலோ என்னவோ, தாக்குதலின் பின்னர் இந்த வலையமைப்பு தொடர்பில் எந்த தகவலும் வெளிநாட்டு உளவுத் துறைகளிடம் இருந்து எமக்கு கிடைக்கவில்லை. - எனத் தெரிவித்தார்.

## போதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய பொலிஸ் அதிகாரி கைதானார்!

மதுபோதையில் வாகனம் செலுத்தி, விபத்தொன்றை ஏற்படுத்தினார் எனக் குறிப்பிடப்படும் சம்பவம் தொடர்பில், கண்டி பொலிஸ் நிலையத்தின் எஸ்.சி.ஐ.யூ. எனப்படும் விடே குற்றவியல் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதான பொலிஸ் பரிசோதகரான குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரி செலுத்திய கார், கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவின், குருநாகல் – கண்டி பிரதான வீதியின் யட்டிவாவல பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் செலுத்துநர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பிரதான பொலிஸ் பரிசோதகருக்கு எதிராக சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சுதத் மாசிங்க கூறினார்.

இந்த விபத்து தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகரின் மேற்பார்வையில், போக்குவரத்து பிரிவின் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், சந்தேக நபரான பொலிஸ் அதிகாரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் 5 தனியார் வைத்தியசாலைக்கு பி.சி.ஆர். சோதனை வழங்க அனுமதி!

கொழும்பு, டிசெ.08

கொவிட் - 19 நோயாளர்களை அடையாளம் காணும் நோக்கில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ள மேலும் 5 தனியார் வைத்தியசாலைகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது நாட்டில் அன்றாடம் 13 ஆயிரம் முதல் 14 ஆயிரம் வரையிலான சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அதனை 20 ஆயிரமாக அதிகரிக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வைத்தியர் சமன் ரத்நாயக்க, உலக சுகாதார நிறுவனம் இலங்கைக்கு இரண்டாவது தொகுதி விரைவான ஆன்டிஜென் டெஸ்ட் கிட்களை வழங்கியுள்ளது என்பதை உறுதிப்படுத்தினார்.

வைத்தியசாலைகளில் இதுவரை ஒரு லட்சம் சோதனைக் கருவிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டாவது பங்கு தேவையின் அடிப்படையில் இந்த வாரம் விநியோகிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்துமன்றம் நடத்திய ஆறுமுகநாவலர் குரு பூசை நேற்றுக் காலை கலாசாலை நுழைவாயிலில் உள்ள ஆறுமுகநாவலர் திரு வுருவச் சிலைக்கான வழிபாட்டுடன் இடம்பெற்றது.

நாவலர் பாமாலை ஓதல் மற்றும் நாவலர் குறித்த உரைகள் என்பன இடம்பெற்றன. கலாசாலை விரிவுரையாளர்கள் மற்றும் இந்து சமய நெறி ஆசிரிய மாணவர்கள் என குறித்த எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

## 96 இலங்கையர் நாடு திரும்பினர்!

*இருமத்தியகிழக்குநாடுகளிலிருந்து 96 இலங்கையர்கள் நேற்று திங்கட்கிழமை காலை இலங்கை அரசாங்கத்தின் சிறப்பு அனுமதியுடன் நாட்டை வந்தடைந்துள்ளனர்.*

*அதன்படி கட்டாரின் தோஹாவிலிருந்து 48 இலங்கையர்களும், சவுதி அரேபியாவின் ரியாத்திலிருந்து 48 பேரும் நேற்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.*

*இவ்வாறு விமான நிலையத்தைவந்தடைந்தஅனைத்து பயணிகளும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அழைத்தும் செல்லப்பட்டனர்.*

*இதேவேளை 114 இலங்கையர்கள் தொழில்வாய்ப்புக்காக நேற்று காலை நாட்டைவிட்டுவெளியேறியுமுள்ளனர்.*

*அதன்படி 72 பேர் கட்டாரின், டோஹா நோக்கியும், 28 பேர் ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னுக்கும், 14 பேர் சிங்கப்பூருக்கும்கட்டுநாயக்க சர்வதேசவிமானநிலையத்திலிருந்து புறப்பட்டுள்ளனர்.*

# வலி. கிழக்கு தவிசாளரைக் கைது செய்வதற்கு பொலிஸார் மும்முரம்

## அங்கஜன் நாட்டி வைத்த பெயர்ப்பலகையை அகற்றி அரச சொத்தை சேதப்படுத்தினார் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெம்பர் 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷைக் கைதுசெய்வதற்குப் பொலிஸார் பிரதேச சபை அலுவலகத்தில் நீண்ட நேரம் காத்திருந்தும் தவிசாளர் சபைக்கு வருகை தராததால் அவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் அனுமதி பெறப்படாது பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியைப் புனரமைக்க யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலானவர்கள் அடிக்கல்லை நாட்டி வைத்து அங்குரார்ப்பணம் செய்து வைத்த அபிவிருத்தி அதிகார சபையின் பெயர்ப் பலகையை வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அகற்றிய நிலையில் பொலிஸாரால் வாக்கு மூலம் பெறப்பட்டிருந்தது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கடந்த சில நாள்களுக்கு முன்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலானவர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான ஊரெழு அம்மன் கோவில் வீதியை புனரமைக்கவுள்ளதாக அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இவ்வீதியை புனரமைக்க முகவராக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் உள்ளிட்டவர்களின் புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டு திட்டப்பெயர்ப் பலகை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்தநிலையில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் தவிசாளருக்குத் தகவல் வழங்கியமையை அடுத்து, விரைவாக குறித்த பெயர்ப் பலகையை அகற்றுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அவர் கடிதம் (தொலைநகல் வாயிலாகவும்) அனுப்பியிருந்தார்.

ஒரு கடமை நாள் சென்ற பின்னரும் அவர்கள் அகற்றாத நிலையில் பிரதேச சபை ஒன்றுக்குச் சொந்தமான வீதியை மத்திய அரச நிறுவனமாக இருந்தால் என்ன, எந்த நிறுவனமாக இருந்தால் என்ன எக்காரணம் கொண்டும் பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல் புனரமைக்க முடியாது எனத் தெரிவித்து தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குறித்த பெயர்ப் பலகையை அகற்றுமாறு பணித்திருந்தார்.

இதன்படி பிரதேச சபையால் குறித்த அறிவிப்புப் பலகை எடுத்துவரப்பட்டு சபையில் வைக்கப்பட்டது. இந்தநிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டை அடுத்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளரிடம் பிரதேச சபைக்கு வருகை தந்து அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் வாக்கு மூலம் பெற்றுக்கொண்டனர்.

இதில் பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியைப் புனரமைக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை சபையின் அனுமதியின்றி வீதி அதிகார சபை புனரமைப்பதற்கு முயற்சித்தமை சட்டவிரோதம் எனவும், அதனாலேயே சபை ஒன்றுக்கு பகிரப்பட்ட அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகவே தாம் குறித்த திட்டப்பெயர்ப் பலகையை அகற்றியதாகவும், உரிய முறைப்படியான அனுமதி பெறப்பட்டால் அல்லது உரியவாறு அணுகினால் குறித்த பெயர்ப்பல கையை கையளிக்கத் தயார் எனவும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

மேலும், பிரதேச சபை என்பது அதிகாரப் பகிர்வுக்கான ஓர் அலகு என்ற அடிப்படையில் மத்திய அரசின் சட்டத்துக்கு விரோதமானதும் தேவையற்ற தலையீட்டையும் தாமும் தமது சபையும் ஏற்க முடியாது எனவும், அபிவிருத்திக்கு நாம் தடை அல்லர், ஆனால், அதனைச் சட்டத் திட்டங்களுக்கு ஏற்ப பொறுப்புச் சொல்லும் பாங்குடன் மத்திய அரசின் நிறுவனங்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் கேட் டுக்கொண்டார்.

தவிசாளரிடம் இரண்டு தடவைகள் அச்சுவேலி பொலிஸார் வாக்குமூலம் பெற்றிருந்த நிலையில் இன்று அவரைக் கைது செய்வதற்காகப் பிரதேச சபை அலுவலகத்தில் பல மணி நேரமாகக் காத்திருந்தனர்.

குறித்த செய்தியை அறிந்த வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், பா.கஜதீபன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் பிரதேச சபைக்கு வருகை தந்திருந்தனர்.

எனினும், தவிசாளர் சபைக்கு வருகை தராததால் நீண்ட நேரம் காத்திருந்த பொலிஸார் திரும்பிச் சென்றனர்.

# தவிசாளர் நிரோஷின் முன் பிணை மனுவை புதனுக்கு திகதியிட்டது மல்லாகம் மன்று

யாழ்ப்பாணம்,டிசெ.07

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை பொலிஸார் கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடக் கோரும் எதிர்பார்க்கைப் பிணை விண்ணப்பத்தை நாளை மறுதினம் புதன்கிழமை பரிசீலனைக்கு ஒத்திவைத்த மல்லாகம் நீதிமன்றில் அச்சுவேலிப் பொலிஸாருக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அச்செழு அம்மன் கோவில் வீதியை சீரமைக்கும் பணியை ஆரம்பித்து நடப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டது. அது வலி. கிழக்கு பிரதேச சபையின் அனுமதிபெறப்படாது நடப்பட்டது என்று தவிசாளர் தியாராஜா நிரோஷ், அதனை அகற்றுவதற்குப் பணித்திருந்தார். அந்தப் பெயர்ப் பலகை கடந்த வாரம் அகற்றப்பட்டது.

பெருந்தெருக்கள் அமைச்சினால் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 100 லட்சம் கிலோ மீற்றர் வீதிகளை சீரமைக்கும் திட்டத்தில் அதனை நடை முறைப் படுத்தும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, எந்தவொரு வீதியிலும் திட்டத்தின் பெயர்ப்பலகையை நடுவதற்கு அதிகாரம் உண்டு என்று சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்தச் சுற்றறிக்கையை கவனத்தில் கொள்ளாது வலி.கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர், அச்செழு அம்மன் ஆலய வீதியில் நடப்பட்ட பெயர்ப்பலகையை அகற்றி அரச சொத்தைச் சேதப்படுத்தி யுள்ளார் - என்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அத்துடன், அச்செழு அம்மன் கோவில் வீதியை சீரமைக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணம் நிறைவேற்று பொறியியலாளரால் நவம்பர் 27ஆம் திகதியிடப்பட்ட கடிதம், வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனினும் வலி.கிழக்கு பிரதேச சபையின் அனுமதியின் அச்செழு அம்மன் கோவில் வீதி சீரமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டதுடன், அறிவிப்பு பெயர்ப் பலகையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக வலி.கிழக்கு தவிசாளர் தியாகராஜா நிரோஷ், டிசெம்பர் 2ஆம் திகதி குறிப்பிடப்பட்ட கடிதத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பியுள்ளார்.

தம்மால் 27ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்தின் ஊடாக அச்செழு வீதி சீரமைப்புத் தொடர்பில் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணம் நிறை வேற்று பொறியியலாளரால் தவிசாளருக்கு டிசெம்பர் 3ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முறைப்பாட்டின் அடிப்படையில் பிரதேச சபைத் தவிசாளர், தியாகராஜா நிரோஷிடம் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமை வாக்குமூலம் அச்சுவேலி பொலிஸார் பெற் றிருந்தனர்.

அதில் அவர் பெயர்ப்பலகையை அகற்றியதற்கான தனது விளக்கத்தை வழங்கியிருந்தார். அத்துடன், அகற்றிய பெயர்ப்பலகையையும் அவர் பொலிஸாருக்குக் காண்பித்திருந்தார்.

இந்த நிலையிலேயே அரச சொத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை இன்று திங்கட்கிழமை அச்சுவேலி பொலிஸால் கைதுசெய்ய சபையின் தலைமையகத்துக்குச் சென்றிருந்தனர். இன்று காலை முதல் மாலை வரை அவர் சபைக்கு சமுகமளிக்காததால் பொலிஸார் திரும்பிச் சென்றனர்.

இந்த நிலையில் வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர், தியாகராஜா நிரோஷை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்யவதைத் தடுக்கும் விண்ணப்பம் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் அவரது சட்டத் தரணிகளால் முன்வைக்கப்பட்டது.

தவிசாளர் கைது செய்யப்படுவது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று குறிப்பிட்டு சட்டத்தரணிகள் விஸ்வலிங்கம் திருக்குமரன், விஸ்வலிங்கம் மணிவண்ணன், சுபாஸ்கரன் உள்ளிட்டோர் மன்றில் சமர்ப்பணம் செய்தனர்.

அதனை ஆராய்ந்த மன்று விண்ணப்பத்தை நாளை மறுதினம் பரிசீலனைக்கு எடுக்க திகதியிட்டதுடன், அன்றையதினம் அச்சுவேலி பொலிஸாரை மன்றில் முன்னிலையாக அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டது.

# மஹர சிறை சம்பவம்: அறிக்கை சமர்ப்பிப்பு



மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கை இன்று பிற்பகல் 3.00 மணியளவில் நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் இந்த விசாரணை நடவடிக்கைகளுக்காக 25 பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருந்தது.

மஹர சிறைச்சாலையில் கடந்த தினம் எற்பட்ட அமைதியின்மை தொடர்பில் ஆராய்வதற்காக நீதி அமைச்சரால் இந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

அவர்கள் கடந்த 03 ஆம் திகதி முதன் முறையாக மஹர சிறைச்சாலைக்கு சென்று வாக்குமூலம் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிதாக மேலும் 10 ஆஸ்பத்திரிகளில் தொற்றுச் சோதனை

நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை 20,000 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சின் இரசாயனகூட சேவைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் சமன் ரத்னாயக்க தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதற்காக மேலும் 5 அரச வைத்தியசாலைகள் மற்றும் 5 தனியார் வைத்தியசாலைகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் உயிரிழந்தவரின் சடலம் மாறி வழங்கப்பட்டமையினால் குழப்பம்

கிளிநொச்சி வைத்தியசாலையில் உயிரிழந்தவரின் சடலம் மாறி வழங்கப்பட்ட அதிர்ச்சி சம்பவம் இடம்பெற்றுள்ளது. பி.சி.ஆர். பரிசோதனை முடிந்த சடலமென பி.சி.ஆர். பரிசோதனை முடிவடையாதவரின் உடல் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இரண்டு மரணங்கள் இடம்பெற்றன. ஒன்று கிளிநொச்சி திருவையாறு பகுதியினைச் சேர்ந்த 55 வயது மதிக்கதக்க கோவிந்தன் மோகனதாஸ். இரண்டாவது கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தைச் சேர்ந்த கந்தையா செல்வராசா (வயது61). இருவரும் சுகயீனம் காரணமாக மரணமடைந்துள்ளனர். இருவரும் மாரடைப்பு காரணமாக மரணமடைந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வைத்தியசாலைக்கு சென்ற மோகனதாஸ் கொரோனா சந்தேகத்தின் பெயரில் அதற்குரிய தனிமைப்படுத்தல் விடுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் இரவு மரணமடைந்துள்ளார்.

இதேவேளை செல்வராசா நேற்று முன்தினம் இரவு நெஞ்சு வலி காரணமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போதே மரணமடைந்துள்ளார்.

இருவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த வைத்தியசாலை அதன் மாதிரிகளை பெற்று பரிசோதனைக்காக அனுப்பியிருந்தார்கள்.

இதில் மோகனதாஸ் என்பவரின் பரிசோதனை முடிவுகள் தொற்று இல்லை என வந்திருந்ததால் அவரது உடலை உறவினர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதேவேளை சாவடைந்த மற்றையவரான செல்வராசாவின் பரிசோதனைக்கு மாதிரிகள் இன்று காலையே அனுப்பப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் வைத்தியசாலையின் பிரேத அறையில் மோகனதாஸுக்கு பிரேத பரிசோதனை செய்வதற்கு பதிலாக செல்வராசாவுக்கு செய்யப்பட்டு அவரது உடல் நேற்றுப் பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் திருவையாறில் உள்ள அவ ரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. எடுத்துச் செல்லப்பட்ட உடல் வீட்டில் பெட்டி திறந்து வைக்கப்பட்ட நிலையில் மனைவி உட்பட அனைவரும் சோகத்தில் கதறி அழுதுகொண்டிருக்க இறந்த மோகனதாஸின் 15 வயது மகள் இது தந்தையின் உடல் இல்லை என்று கதறிய போதே உடல் மாறி அனுப்பபட்ட விடயம் தெரியவந்தது.

மீண்டும் நேற்று மாலை திருவையாறு வீட்டிலிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு உடல் கொண்டுவரப்பட்டுள்ளது. அத்துடன் மோகனதாஸின் உடலுக்கான பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உடல் உறவினர்களிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

இதேவேளை, செல்வராசா என்பவரது பி.சி.ஆர். முடிவுகள் இன்னமும் கிடைக்கப்பெறாத நிலையில் அவருக்கு சிலவேளை கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்படுமாயின் பிரேத பரிசோதனை செய்த வைத்தியர், ஊழியர்கள் மற்றும் சாவுவீட்டில் கலந்து கொண்ட உறவினர்கள் என அனைவருக்கும் அத்தொற்றுப் பரவும் பாரிய அபாய நிலை தோன்றியுள்ளது.

## அடையாளம் காட்டியதில்தான் தவறு நேர்ந்ததாம்

(ரு.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச. 08

கிளிநொச்சி திருவையாறில் பிரேதம் மாறிக் கையளிக்கப்பட்டமைக்கு அந்தச் சடலத்தை உறவினர் அடையாளம் காண்பித்ததில் ஏற்பட்ட தடுமாற்றமே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு இடம்பெற்ற தவறான மாறாட்டம் திரு வையாறில் உயிரிழந்தவரின் உறவுகள் சவச்சாலையில் பிரேதத்தை அடையாளம் காட்டும்போது ஏற்பட்டமையில் இருந்தே ஆரம்பித்துள்ளதாக வைத்தியசாலையின் ஒரு தரப்பு சுட்டிக்காட்டியது. அத்துடன் இவ்விடயம் வைத்தியசாலையின் சீ.சீ.ரி.வியிலும் பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேநேரம் திருவையாறில் உயிரிழந்தவருக்காக அவரது உறவுகள் முதலில் வேண்டிய உடை, பெட்டி என்பன கனகாம்பிகைகுளத்தைச் சேர்ந்தவருக்கு வழங்கப்பட நேர்ந்து விட்டதால் அதற்கான பணத்தை சம்பந்தப்பட்டோர் கொடுத்து விடயத்தை சுமுகமாகத் தீர்த்துக் கொண்டனர் எனத் தெரியவருகின்றது.

## அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் தொடர்ந்து 39 ஆயிரம் குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்!

### புதிய தொற்றாளர் காணப்படாதவிடத்து முடக்கம் நீக்கம்

**(செல்வி விநாயகமூர்த்தி)**

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று மத்திய சந்தை தொகுதியில் கண்டறியப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் காரணமாக கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் நேற்று வரை 12 நாள்கள் கடந்த நிலையில் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

அக்கரைப்பற்று பிரதேசசெயலத்திற்குட்பட்ட 14 ஆயிரத்து 735 குடும்பங்களும், அட்டாளைச்சேனை பிரதேசசெயலகத்திற்குட்பட்ட 15 ஆயிரத்து 413 குடும்பங்களும், ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் 8 ஆயிரத்து 411 குடும்பங்களும் என மொத்தமாக 38 ஆயிரத்து 559 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா தனிமைப்படுத்தல் காரணமாக இப் பகுதியில் உள்ள பாடசாலைகள், வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டுள்ளமையுடன் பொதுப்போக்குவரத்துக்கள் யாவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா தனிமைப்படுத்தல் காரணமாக வீடுகளில் முடங்கியிருக்கும் நாளாந்த வருமானம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்டும் வருகின்றன.

இதேவேளை நேற்று முன்தினம் கொவிட்19 தொடர்பான கலந்துரையாடல் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன் போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்தியர் சுகுணன் கருத்து தெரிவிக்கையில் -

தொடர்ச்சியாக கொவிட் தொற்று நோயாளர்கள் இப்பகுதியில் இனங்காணப்படுகின்றமை ஆரோக்கியமற்ற நிலைமையைத் தோற்றுவித்திருக்கின்றது. தனிமைப்படுத்தல் கால எல்லையை வெகு விரைவாக நீக்குவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். தனிமைப்படுத்தப்பட்ட 14 நாள்களின் பிற்பாடு 48 மணித்தியாலங்களில் கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்படாதவிடத்து தனிமைப்படுத்தல் நீக்குவது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குச் சிபார்சு செய்யப்படும். ஆளுனர் மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் முடிவுக்கு இணங்கவே தனிமைப்படுத்தல் சட்டம் நீக்கப்படும். - எனவும் தெரிவித்தார்

அத்தோடு தனிமைப்படுத்தல் காரணமாக விவசாயிகளுக்கு தமது விவசாய நிலங்களைப் பார்வையிட அனுமதி வழங்கப்படாத நிலையில் இன்று (செவ்வாய்) முதல் கட்டம் கட்டமாக அனுமதி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், பிரதேச, பிராந்திய விவசாய அமைப்புக்களின் ஊடாக அனுமதி வழங்கவேண்டிய விவசாயிகளின் பெயர் விவரங்கள் விவசாய திணைக்களத்தினூடாக கிடைக்கப்பெறும் பட்சத்தில் பி.சீ.ஆர். பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கொரோனா தனிமைப்படுத்தல் காரணமாக இப்பிரதேசத்தில் அதிகளவில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிட்டத்தக்கதாகும்.

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்கும் சதி குறித்து ஜனாதிபதியின் கவனம் தேவை!

### மின்சார பொதுச் சேவைகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 08

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு நீக்கப்பட்டால் அரச நிதி ஊழல்வாதிகளால் கொள்ளையடிக்கப்படும். அதிக விலைக்கு மின்சாரம் கொள்வனவு செய்யப்படும் போது மின்கட்டணம் அதிகரிக்கப்படும் இதனால் அரசாங்கம் பாரிய நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.

பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகள் தொடர்பாக ஜனாதிபதி விசேட கவனம் செலுத்த வேண்டும் என மின்சார பொது சேவைகள் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

மின்சார மாபியாக்கள், ஊழல் மோசடியாளர்கள், அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் மின்சாரத்துறையில் முன்னெடுக்கும் முறைக்கேடான நடவடிக்கை தொடர்பாகத் தொடர்ந்து வெளிப்படுத்தியுள்ளோம்.

முறைகேடான விதத்தில் மின்சார ஒப்பந்தங்களைச் செய்து பில்லியன் கணக்கில் நிதி சேகரித்துள்ளார்கள்.

மின்சாரத்துறையில் இடம்பெறும். மோசடிகளை நன்கு அறிந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது சுபீட்சமான கொள்கை திட்டத்தில் சிறந்த யோசனைகளை உள்ளடக்கினார்.

சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்ட விஞ்ஞாபனத்தில் 37 ஆம் பக்கத்தில் கடந்த அரசாங்கத்தில் முறையற்ற விதத்தில் மின்சாரம் தொடர்பில் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சாரத்துறையில் முறைகேடான விதத்தில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்பதை பொதுபயன்பாட்டு ஆணைக்குழு, நாடாளுமன்ற கோப்குழு மற்றும் கணக்காளர் நாயகம் ஆகியன பகிரங்கப்படுத்தின.

இந்த மோசடிகள் தொடர்பாக மின்சார பொதுச்சேவை சங்கம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளது.

முறைக்கேடான ஒப்பந்தங்களால் மின்சாரத்துறைக்கு இதுவரையில் 10 பில்லியன் ரூபா நிதி நட்டம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான ஒப்பந்தங்களைத் தொடர்ந்து நீடிக்க நிதி மோசடியில் ஈடுப்பட்டுள்ள அதிகாரிகள் முயற்சிக்கிறார்கள்.

இதற்கு பொதுபயன்பாட்டு ஆணைக்குழு தடையாக உள்ளதை அறிந்து ஜனாதிபதியின் செயலாளர் ஊடாக ஆணைக்குழுவை நீக்க சூழ்ச்சிகளை முன்னெடுக்கிறார்கள். இவ்வாறான செயற்பாடு ஜனாதிபதி மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை பலவீனப்படுத்துவதாக அமையும்.

மின்சாரத்துறையில் தொடர்ந்து முறைகேடுகள் இடம்பெற்றால் 30 ஆயிரம் சேவையாளர்களும், 70 லட்சம் வாடிக்கையாளர்களும் பாதிக்கப்படுவார்கள்.

அமெரிக்க நிறுவனத்தில் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யவும், 10 வருடகாலத்துக்கு குறுகிய தேவைக்காக 200 மெகாவாட் மின் கொள்வனவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மின்னுற்பத்தி நிலையத்தை அமைக்க பொதுபயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்க மறுக்கிறது. ஆகையால் ஆணைக்குழுவை நீக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர். மின் நிலையங்கள் நிர்மாணிக்கப்படுவதன் தாமதம் தொடர்பாக ஆராயப்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காற்று மின்னுற்பத்தி நிலைய நிர்மாணிப்புக்கு 2016 ஆம் ஆண்டு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியது. ஒப்பந்தத்தின் பிரகாரம் கடந்த வருடமே இந்த மின்னுற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொதுபயன்பாட்டு ஆணைக்குழு நீக்கப்பட்டால் அரச நிதி பல தரப்பினரால் மோசடி செய்யப்படும்.

பொதுபயன்பாட்டு ஆணைக்குழு நீக்கப்பட்டால் மின்சாரம் அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்படும் .இதனால் மின்கட்டணம் அதிகரிக்கப்படும்.

இவ்வாறான சம்பவங்களால் அரசாங்கம் பாரிய நெருக்கடிகளை எதிர்க்கொள்ள நேரிடும். ஆகவே இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி உரிய கவனம் செலுத்த வேண்டும் என்பது சங்கத்தினரது கோரிக்கையாகும். - என்றுள்ளது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதி பகல் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் இடம்பெற்ற படுகொலையின்போது 35 தமிழ் கைதிகளே படுகொலை செய்யப்பட்டனர். எஞ்சியோர் தப்பியிருந்த போதும் சட்டமோ, பொலிஸ் எந்த நடவடிக்கையும் எடுக்காததன் விளைவே இரு நாள்கள் கழிந்து, அதாவது 27ஆம் திகதி அதே சிறையில் மீண்டும் ஒரு படுகொலை தாண்டவம் ஆடியது. அதில் 18 கைதிகள் உயிரிழந்தனர்.






ந.லோகதயாளன்

# மஹர சிறை நெருப்பு முன்னை இட்ட தீ!

**1983** ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம், 27ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறைச்சாலையில் சிங்களம் மூட்டிய தீ இன்றும் மஹர சிறைச்சாலை வரையில் பற்றி எரிகின்றபோதும் அதனை எந்த மனித நேய அமைப்புக்களாலோ அல்லது சர்வதேச சட்டங்களாலோ அணைக்க முடியவில்லை என்பதே இலங்கையின் துன்பியல் நிலைமையாகவுள்ளது.

அதாவது அன்று 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி பகல் 2 மணிக்கு வெலிக்கடை சிறையில் தமிழ் அரசியல் கைதிகளை சுட்டும், வெட்டியும், குத்தியும் ஆயுதம் தாங்கியோர் படுகொலை செய்த சமயம் சக சிங்களக் கைதிகள் மட்டுமன்றி வெளியில் இருந்த காடையர்கள் கூட சிறைச்சாலைக்குள் அனுமதிக்கப்பட்டனர். ஏனெனில் அப்போது கொல்லப்பட்டுக் கொண்டு இருந்தவர்கள் அனைவரும் தமிழர்கள்



என்பதனால்.

ஆனால் இன்று ஒரு சிங்கள மகன் கூட சிறைக்குள் என்ன நடக்கின்றது என எட்டியும் பார்க்க முடியாது வீதியில் தவிக்கின்றனர். அதேநேரம் எந்தக் கைதிக்கும் எவரும் உதவவும் முடியவில்லை. இதுவே மஹர சிறைச்சாலையின் அவலமாகக் காணப்பட்டது. அதாவது அன்று வெலிக்கடையில் விட்ட குண்டு இன்று மஹர வழியாக வெளியேறுகின்றது.

உயிரின் மதிப்பு என்பதை இனத்தின்பால் தீர்மானிக்க முடியாது. அது மனிதநேயத்தின்பால் தீர்மானிக்க வேண்டியது என 1983 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை இடம்பெற்றபோதே கூறினாலும். அப்போது அதனை சிங்களம் ஏற்கவில்லை. மாறாக எக்காளமிட்டது.

ஆனால் இன்று இடம்பெற்றவற்றை, அவை சிங்கள உயிர்கள் என ஒதுக்கிவிட்டுப் போக தமிழனும் விரும்பவில்லை.

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைக்கு சிறைச்சாலையில் கொரோனா பரவுவதான அச்சம் கைதிகள் மட்டத்தில் ஏற்பட்டதே அடிப்படை எனக் கூறப்படுகின்றது. அந்த அச்சம்தான் காரணம் எனில் அந்த அச்சத்தைப் போக்கியிருக்க வேண்டியது அதிகாரிகளின் கடமைதான். அல்லது அதற்கான மாற்று சுகாதார ஏற்பாட்டை மேற்கொண்டிருக்க வேண்டும். குறைந்த பட்சம் என்ன மாற்று ஏற்பாட்டை மேற்கொள்ளவுள்ளோம் என்பதனைத் தெரிவித்தாவது நிலைமையைக் கட்டுப்படுத்தியிருக்கலாம் என்ற ஒரு கருத்தும் உண்டு.

அவை ஏதும் இடம்பெறாத நிலைமையில் கொரோனா என்னும் பூதம் தாம் செய்யாத தவறுக்காகத் தம்மை அழித்துவிடும் எனக் கைதிகள் எண்ணியிருக்க கூடும். இதனாலேயே சட்டத்தை மீறி தப்பிக்க அவர்கள் முயற்சித்துள்ளனர்.

இங்கே ஒரேயொரு விடயம் உறுதியாகியுள்ளது. அதாவது சிறைக் கைதிகளிற்கு கொரோனா இருந்தமை ராகம வைத்தியசாலைப் பணிப்பாளரின் கூற்று உறுதி செய்துவிட்டது. இதனால் கைதிகளிடத்தில் நிலவிய அச்சம் உண்மையாகவே தோன்றுகின்றது. ஏனெனில் சிறையில் காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதித்த பின்பு ராகம வைத்தியசாலைப் பணிப்பாளர் ஷெல்டன் பெரேரா சில விடயங்களை உறுதிப்படுத்தினார்.

அதாவது இச் சம்பத்தின்போது 71 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இருவர் அதிகாரிகள். இதில் எட்டுப்பேர் மரணமடைந்தனர். 10 பேர் ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட அதே நேரம் 15 பேருக்கு சத்திர சிகிச்சை இடம்பெற்றது. இதில் 48 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொண்டதில் 26 கைதிகளிற்கு கொரோனா தொற்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது என்கின்றார். அவ்வாறானால் அங்கே பலருக்கு கொரோனா தொற்று இருந்தமை உறுதி செய்யப்பட்டு விட்டதாகவே தெரிகின்றது.

இவ்வளவு சேதம் ஏற்பட்டதாக வைத்தியசாலைப் பணிப்பாளரே கூறும் நிலையில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான அஜித் ரோஹண இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் “நிலமையை கட்டுப்படுத்த பொலிஸாருடன் விசேட அதிரடிப்படையினரையும் அந்த இடத்திற்கு அனுப்பினோம். சிறைச்சாலைக்கு வெளியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இதனால் ஒருவரால் கூட தப்பியோட முடியாமல்போனது . பொலிஸாரோ, அதிரடிப்படையினரோ அதிகாரத்தை பயன்படுத்தவில்லை” - என்கின்றார்.

ஒருவரும் தப்பி ஓடாத விடயத்தில் அவருக்கு சந்தோசம். சட்டத்தை காத்துவிட்டனர். அவ்வாறானால் 11 மனித உயிர் பறிபோன விடயத்தில் சட்டத்தின் நிலைப்பாடு யாது? அது இலங்கையின் அகராதியில் உள்ளது போன்று ஒப்புக்கு விசாரணை இடம்பெறும்.



ஏனெனில் 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவத்திற்கே இன்று வரை நீதி முழுமையாக நிலைநாட்டப்படாத நாட்டில் நேற்று இடம்பெற்ற சம்பவத்திற்கு கிட்டிவிடும் என எதிர்பார்த்தால் அதனை விட வேறு முட்டாள் தனம் இருக்க முடியாது.

இதேநேரம் ஞாயிறு இரவு 8 மணிக்கு ஆரம்பமான அமைதியின்மையினைத் தொடர்ந்து இரவு முழுவதும் வன்முறை இடம்பெற்று காலையிலும் மோதல் நீடித்தபோதும் திங்கட்கிழமை மாலையே இறந்தவர்களில் சிலரின் பெயர் விவரங்கள் சிறைச்சாலையின் முன்பாக கூடிய உறவுகள் முன்பாக வாசிக்கப்பட்டன. இதனையடுத்து ஏற்கனவே சிறைச்சாலை முன்பு கூடி ஆர்ப்பரித்த சிறைக் கைதிகளின் உறவுகள் மேலும் கோசங்களை எழுப்பிக் கத்தினர். அப்போது உயிர் தப்பிய எஞ்சிய சிறைக் கைதிகள் தனிமைப்படுத்தல் மையங்களிற்கு ஏற்றிச் சென்றதனைக் காண முடிந்தது. அவ்வாறானால் இந்த செயலை முன்கூட்டியே மேற்கொண்டிருந்தால் இந்த அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டிருக்குமா என்ற கேள்வியும் எழுகின்றது.

அது இடம்பெற்றிருக்காது. ஏனெனில் இலங்கையின் அகராதியில் சிறைச்சாலையில் இருக்கும் கைதிகளை வேண்டுமென்றே கொல்கின்றனரா என்ற சந்தேகம் 1983ஆம் ஆண்டே எழுப்பிய நிலையில் இன்றுவரை மரணப்பட்டியல் நீள்கின்றதே அன்றி விடை கிடைக்கவில்லை.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதி பகல் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் இடம்பெற்ற படுகொலையின்போது 35 தமிழ் கைதிகளே படுகொலை செய்யப்பட்டனர். எஞ்சியோர் தப்பியிருந்த போதும் சட்டமோ, பொலிஸ் எந்த நடவடிக்கையும் எடுக்காததன் விளைவே இரு நாள்கள் கழிந்து, அதாவது 27ஆம் திகதி அதே சிறையில் மீண்டும் ஒரு படுகொலை தாண்டவம் ஆடியது. அதில் 18 கைதிகள் உயிரிழந்தனர்.

இவை அனைத்திற்கும் அன்று முதல் ஒப்புக்கு விசாரணைகள் இடம்பெற்றன. ஆனால் தீர்வு மட்டும் கிட்டாத நிலையில் இன்று மஹரவில் வந்து நிற்கின்றது.

உண்மையில் ஒவ்வொரு சிறைக் கைதியின் உயிருக்கும் அரசு பாதுகாப்பு வழங்க வேண்டும். அதனை நீதித்துறை உறுதி செய்ய வேண்டும். ஏனெனில் நீதிபதிகள் வழங்கும் உத்தரவின் பிரகாரமே அவர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். அவ் வாறானால் சிறையில் இருப்பவர்களிற்கு நீதிமன்றம்தானே பொறுப்பேற்க வேண்டும் என்று எழுகின்ற கேள்வியிலும் நியாயம் உள்ளதாகவே தெரிகின்றது.

இதேநேரம் தமிழர்கள் என்ற காரணத்தால் சிறைக்கைதிகள் கொல்லப்படும்போது சிங்கள மக்கள் அமைதி காத்தமைக்கான விளைவே தற்போதைய நிலைமையாகவுள்ளது. அதனால் இது முன்னை இட்ட தீயின் விளைவு.

இனியேனும் சட்டம், மனித உரிமை, மனிதாபிமானங்களில் தமிழர்களின் நியாயமான கோரிக்கையின்போது இணைந்து குரல்கொடுக்க சிங்கள மக்களும் சர்வதேச சட்டங்களும் முன் வர வேண்டும் என்ற கோரிக்கை நியாயமாகவே தென்படுகின்றது.

# கொரோனாவால் மரணிப்போரை தகனம் செய்வது அரசு மேற்கொண்ட தீர்மானமல்ல!- மஹிந்த அமரவீர

கொரோனாவில் மரணிப்பவர்களை தகனம் செய்வது என்பது அரசாங்கத்தின் தீர்மானம் அல்ல. தொழிநுட்பகுழுவின் தீர்மானத்தை மீறி அரசாங்கத்துக்கு செயற்பட முடியாது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சுற்றாடல், வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் எச்.எம்.ஏ. ஹலீம் கலந்துகொண்டு உரையாற்றுகையில் –

மரணிப்பவர்களின் உடலில் இருக்கும் வைரஸ் நீரில் பரவி சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவ்வாறு இருந்தும் தொழிநுட்ப குழு எந்த அடிப்படையில் கொரோனாவில் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய நிராகரிக்கின்றனர் என்பதை வெளிப்படுத்தவேண்டும். சடலம் மண்ணுடன் கலந்து, அதனால் வைரஸ் நீருடன் கலந்துவிடும் என்ற அவர்களின் தீர்மானத்துக்கு எந்த அடிப்படையும் இல்லை.

மரணித்தவர்களின் உடலில் இருக்கும் வைரஸ் ஒருபோதும் நீருடன் கலந்து பரவுவதில்லை என உலக சுகாதார அமைப்பின் முன்னாள் உறுப்பினராக இருந்த வைத்தியர் நிஹால் அபேசிங்க உறுதியாக தெரிவித்திருக்கின்றார். அதேபோன்று பல வைத்தியர்கள் இதுதொடர்பாக பகிரங்கமாக தெரிவிக்கும் நிலையில், இந்த விசேட தொழிநுட்ப குழு மாத்திரமே அடக்கம் செய்ய அனுமதிக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றது.

உலக சுகாதார அமைப்பின் தீர்மானத்தையும் தாண்டி, தொழிநுட்ப குழு இந்த விடயத்தில் இந்தளவு பிடிவாதமாக இருக்கின்றமை, பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இது ஓர் இனத்தை பழி தீர்ப்பதற்காக செய்கின்றார்களா என எண்ணத்தோன்றுகின்றது.– என்றார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்:–

கொரோனாவில் மரணிப்பவர்களின் இறுதிக்கடமை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப குழுவுக்கே வழங்கப்பட்டிருக்கின்றது. இதில் எடுக்கப்படும் தீர்மானத்துக்கும் அரசாங்கத்துக்கும் அமைச்சரவைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இதில் அரசாங்கம் தலையிடுவதில்லை.

குறித்த தொழில்நுட்ப குழு எடுக்கும் தீர் மானத்தையே அரசாங்கம் பின்பற்றுகின்றது. அதனை மீறி அரசாங்கத்துக்கு தீர்மானிக்க முடியாது.– என்றார்.

# ஆசிரியருக்குக் கொரோனா நோர்வூட் தமிழ் ம.வி. பூட்டு!

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவருக்கும் அவரது பிள்ளைக்கும் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இன்று திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை பாடசாலையை பூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மஸ்கெலியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டி.சந்திரராஜன் தெரிவித்தார்.

பொகவந்தலாவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் கீழ் செயற்படும் பொகவந்தலாவை ஆரியபுர பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியைக்கும், அவரது பிள்ளைகள் இருவருக்குமே வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியை கடந்த 28 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் பாடசாலைக்கு சமூகமளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆயிரத்து 500 மாணவர்கள் கல்வி கற்பதுடன், 76 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இதனால், அந்தப் பாடசாலையின் அதிபர் உட்பட 76 ஆசிரியர்களையும் தனிமையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மேற்படி ஆசிரியையுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய 100 மாணவர்கள் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், அந்த ஆசிரியை நெருங்கிப் பழகிய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நாளை பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுப்பதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதேவேளை, பாடசாலை மற்றும் பாடசாலை வளாகத்தை தொற்று நீக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலைக்கு உட்பிரவேசிக்கக் கூடாது என அறிவித்தலும் ஒட்டப்பட்டுள்ளது.

## மூன்றாவது அலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா மூன்றாவது அலை உருவானமை தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான அநுர குமார திஸாநாயக்க சபையில் நேற்று எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே, அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனாவின் மூன்றாவது அலை யின் கொத்தணிகள் தொடர்பான விசா ரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸ் குற்றவியல் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றின் அதிகாரிகளுக்கே தொற்று ஏற்பட்டுள்ளது.

கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவின் 70 அதிகாரிகளுக்கும், குற்றப் புலனாய்வுப் பிரிவின் 20 அதிகாரிகளுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு வழங்கிய ஆலோசனைகளுக்கு ஏற்பவே குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற் சாலை நிறுவனத்தில் கொரோனாத் தொற்று ஏற்பட்டது எவ்வாறு என்று இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இது தொடர்பாக, 100 இற்கும் மேற்பட்ட வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விசாரணைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது – என்றார்.

# சாத்தியமற்றுப் போனது கோட்டாவின் சீன விஜயம்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததன் பின்னர் தனது கன்னி விஜயத்தை டில்லிக்கு மேற்கொண்டிருந்தார். அடுத்த விஜயமாக சீனா அமைந்திருந்தது. கடந்த ஜனவரி மாதம் இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் திடீரென விஜயம் இரத்து செய்யப்பட்டது.

சீனாவிலிருந்து ஏனைய உலக நாடுகளுக்கு பரவிய கொவிட் – 19 வைரஸ் தொற்றே இந்த விஜயம் இரத்தாவதற்குக் காரணமெனவும் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், பெரும்பாலும் வருட இறுதியில் ஜனாதிபதி கோட்டாபயவின் சீன விஜயம் சாத்தியமாகும் என அறிவிக்கப்பட்டது.


ஆனால் அதுவும் சாத்தியமற்றதாகியுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி ஊடக பிரிவின் பணிப்பாளர் மொஹான் சமரநாயக்க, ஜனாதிபதியின் சீன விஜயம் தொடர்பில் கொவிட் – 19 நிலைமை சீரானதன் பின்னரே தீர்மானிக்கப்படும் என்பதுடன் இந்த வருடம் அதற்கு சாத்தியமில்லை என்றும் குறிப்பிட்டார்.

நல்லாட்சியின் போது பின்னடைவுகளை சந்தித்திருந்த சீனாவுடனான உறவு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் மீண்டும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியில் சீனாவிற்கான விஜயம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியாவிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்டிருந்தார். கடந்த வருடம் நவம்பர் மாதம் 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் ஜனாதிபதியின் இந்திய விஜயம் அமைந்திருந்தது .

ஆனால் ஜனவரியில் திட்டமிடப்பட்டு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியான நிலையில் ஜனாதிபதியின் சீன விஜயம் இரத்தானது. இதன் பின்னரே சீன ஜனாதிபதி, கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் உரையாடி இரு தரப்பு உறவுகள் தொடர்பாக நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

அத்துடன் இலங்கையில் மீண்டும் கொவிட் கொத்தணி உருவாகி அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்த நிலையில் சீன உயர்மட்ட தூதுக்குழுவை சீனா அனுப்பியது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் அரசியல் விவகார உறுப்பினரும், கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு வெளிவிவகார அலுவலகத்தின் பணிப்பாளருமான யாங் ஜீச்சி தலைமையிலான 26 உறுப்பினர்களை கொண்ட குழுவே இலங்கைக்கு அவசரமாக விஜயத்தை மேற்கொண்டிருந்தது. நேரடி சந்திப்புகளின் ஊடாக சில உறுதிப்பாடுகளை எட்டுவதே இந்தக் குழுவின் இலக்காக அமைந்துமிருந்தது.

# மட்டக்களப்பில் மின்னல் தாக்கி மாடுகள் சாவு!



கடந்த காலங்களாக பேசப்பட்டு வரும் மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம் மிருக கொலையாக மாறியுள்ளது.

கடந்த காலங்களில் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் மூலமாக சிங்கள குடியேற்றவாசிகள் விவசா யம் செய்வதற்காக மேச்சல் தரையை கிழக்கு மாகாண ஆளுநர் அவர்களின் அனு சரணையுடன் குறித்த இடங்கள் தாரை வார்த்துக் கொடுக்கப் பட்டன.

அதனால் கால்நடைகள் அனைத்தும் நிர்க்கதியான நிலை உருவாகியது. இதன் முதற்கட்டமாக இரண்டு லட்சம் மாடுகள் மூலம் இலங்கை நாட்டுக்கு பொருளாதா ரத்தை உயர்த்திய பண்ணையாளர் களுக்கு குறித்த விவசாய நடவடிக்கை காரணமாக தங்களது கால் நடைகளை அங்கிருந்து அகற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஆகவே 15 பண்ணையாளர் கள் வாழ்வாதாரம் இழந்த நிலையில் தங்களது கால்நடைகளுடன் மட்டக்களப்பு பிரதேச செயலகத் துக்குட்பட்ட பிரிவுகளுக்கு வந்துள்ளனர். இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலநிலை காரணமாக மின்னல் தாக்கி பல மாடுகள் உயிரிழந்துள்ளன.

இந்த கால்நடைகளின் கொடுமையான நிலை பண்ணையாளர் கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றது. கால்நடை சம்பந்தமாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கால் நடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொரோனாவிலிருந்து 344 பேர் குணமடைவு!

நாட்டில் நேற்று திங்கட்கிழமை 344 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 20 ஆயிரத்து 804 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றால் இதுவரை 27 ஆயிரத்து 877 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையோடு, வைத்தியசாலையில் தங்கி 6 ஆயிரத்து 933 பேர் கிசிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 491 பேர் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர். நாட்டில் இதுவரை கொரோனா தொற்றால் 140 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மெனிங் சந்தை வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு புறக்கோட்டை மெனிங் சந்தையிலுள்ள வர்த்தகர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பேலியகொட புதிய சந்தைக்கட்டடத் தொகுதியில் தமக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட இடவசதி, போதுமானதாக இல்லை என கூறியே இந்த வர்த்தகர்கள் நேற்று ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் கூடியுள்ளனர்.

# யாழ். கொரோனா ஆய்வுகூடத்தில் நேற்று 353 பேருக்கு பரிசோதனை

## எவருக்கும் தொற்று இல்லை



யாழ். கொரோனா ஆய்வுகூடத்தில் இன்று மேற்கொள்ளப்பட்ட 353 பேரின் பரிசோதனை முடிவுகள் குறித்த தகவலை யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

இன்று (நேற்று) யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ். மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 353 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இன்று பரிசோதனை செய்யப்பட்டவர்களில் கொரோனாத் தொற்று எவருக்கும் இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது. - என்றார்.

# சூரியசக்தி, காற்றலை மின் உற்பத்தியை வட மாகாணத்தில் மேம்படுத்த நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் துமிந்த தலைமையில் கிளிநொச்சியில் நேற்றுக் கலந்துரையாடல்

வடக்கு மாகாணத்தில் சூரியசக்தி, காற்றலை மின் உற்பத்தியை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் சூரியசக்தி, காற்று மற்றும் நீர் மின் உற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தலைமையில் நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி, பூநகரி, கௌதாரி முனை பகுதியில் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் அமைப்பது தொடர்பில் முன்னரே திட்டமிடப்பட்டிருந்த நிலையில், குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இன்றைய கலந்துரையாடலில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க நேற்றுக் கிளிநொச்சிப் பகுதிக்கு மேற்கொண்டிருந்த விசேட விஜயத்தின்போதே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர், மாவட்ட அரசஅதிபர், பூநகரி பிரதேசசெயலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மன்னார் காற்றாலை மின் நிலையம் திறப்பு

மன்னார், டிசெ. 08

மன்னாரில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இலங்கையின் விசாலமான காற்றாலை மின் நிலையம் இன்று திறக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மீள் புதுப்பிக்கத்தக்க வலு சக்தியின் பால் இலங்கை கவனம் செலுத்தியிருப்பது வெற்றி எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

காற்றாலை மின் உற்பத்தியானது சுற்றாடல் நேய மிக்கது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வேக மோட்டார் சைக்கிள் ஓட்டத்தை மடக்க பொலிஸ் விசேட நடவடிக்கை

பிரதான மற்றும் கிளை வீதிகளில் அபாயகரமான முறையில் அதி வேகத்துடன் வாகனங்களை செலுத்துவோரைத் தேடும் பொருட்டு நேற்று முதல் விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அண்மையில் மொரட்டுவ - எகொடஉயன பகுதியில் அதிக வேகத்தில் பயணித்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு இரு சிறுவர்கள் பலியானமையோடு அவர்களின் கர்ப்பிணித் தாய் படுகாயமுற்று அவருக்குக் கருச்சிதைவும் ஏற்பட்ட சம்பவத்தை கருத்திற் கொண்டே இத்தோடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிம்புளாவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிள் பந்தயமொன்று நடாத்தப்படுவதாகக் கிடைத்த தகவல்களையடுத்து இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின்போது, இளைஞர்கள் குழுவொன்றுடன் 24 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸார் வசமாக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாள்களில் இவர்களுக்கெதிராக வழக்கு தொடரப்படுமெனவும், இவ்வாறு தொடர்ந்தும் மோட்டார் சைக்கிள் பந்தயங்கள் நடாத்துவார்களாயின் அவர்கள் கைது செய்யப்படுவார்களெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எஸ்டர் தின குண்டுத் தாக்குதல் 90 வீதமான விசாரணை நிறைவு

ஏப்ரல்-21 பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான 90 வீத பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கோட்டை - மாதிவெல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 37 பேருக்கு எதிராக மனிதக் கொலை சூழ்ச்சி தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உள்ளன எனவும் ஏனையவர்களுக்கு பயங்கரவாதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், இந்த நடவடிக்கைகளை சட்டமா அதிபர் விரைவுபடுத்தும் பட்சத்தில் குற்றவாளிகளை எம்மால் அடையாளங் கண்டுகொள்ள முடியும் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

# 6 வயது சிறுமி உட்பட இருவருக்கு பசறையில் கொரோனாத் தொற்று!

பசறை - கணவரெல்ல பகுதியில் மேலும் 2 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கணவரெல்ல பகுதியை சேர்ந்த 36 வயதுடைய ஆண் ஒருவருக்கும், 6 வயதுடைய சிறுமி ஒருவருக்குமே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி 22 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியாகிய நிலையில், இந்த இருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பசறை - கணவரெல்ல பகுதியில் இதுவரை 15 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை



| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1972.08.01 | பிறந்த திகதி - 1992.10.10 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - -------- | நட்சத்திரம் - உத்திரட்டாதி |
| சூ/ செவ் - 06இல் | பாவம் - 18 |
| பாவம் - ------- | செவ் - 2இல் |
| கல்வி - A/L | கல்வி - O/L |
| தொழில் - பேக்கரி | தொழில் - -------- |
| எதிர்பார்ப்பு - படித்த பெண் | எதிர்பார்ப்பு - சாதாரண மணமகன் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2020 இல் வெளியிடப்பெற்றது.